# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க,
## பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும்
## அதிகாரசபைச் சட்டம்

---

[2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆம் திகதி
அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2025, செத்தெம்பர் மாதம் 04 ஆந் தேதிய **இலங்கைச்சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா. 160.00** **தபாற் செலவு : ரூபா. 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்

ச.வ.- ஓ 46/2023

**[2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]**

**பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையைத் தாபிப்பதற்காகவும்; (44 ஆம் அத்தியாயமான) குதிரைப் பந்தய ஓட்டத்தின்மீது பந்தயம் பிடித்தல் கட்டளைச் சட்டத்தையும், (46 ஆம் அத்தியாயமான) சூதாட்டக் கட்டளைச்சட்டத்தையும் மற்றும் 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தையும் நீக்குவதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**1.** (1) இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (இச்சட்டத்தில் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறானதுமான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள், சட்டமூலமானது எத்தேதியன்று பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்புடைமை

**2.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், 1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அபிவிருத்தி லொத்தர்கள் சபைச் சட்டத்தினது ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட அபிவிருத்தி லொத்தர்கள் சபையினாலும், 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தினது ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய லொத்தர்கள் சபையினாலும் நடாத்தப்பட்ட லொத்தர்கள் மற்றும் சமூகப் பணச்சூதாட்டம் தவிர, எல்லா வகையினவையுமான பணச்சூதாட்டங்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

PL15326 - 588 (2025/06)

சட்டத்தின் குறிக்கோள்கள்

**3.** சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) பணச்சூதாட்டச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்துதலும்;

(ஆ) பணச்சூதாட்டம் தொடர்பான அரசிறைச் சேகரிப்பை உறுதிப்படுத்துதல்;

(இ) பணச்சூதாட்டத்தை நடாத்துவதில் வெளிப்படையான தன்மையையும் நல்லாட்சியையும் உறுதிப்படுத்துதல்;

(ஈ) பணச்சூதாட்டச் செயற்பாடுகளின் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிற்பாட்டினூடாகச் சுற்றுலாப் பயணம், தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துதல்;

(உ) பணச்சூதாட்டத் தொழிலின் நேர்மை தொடர்பில் பொதுமக்களின் நம்பிக்கையை மேம்படுத்துதல்;

(ஊ) பணச்சூதாட்டமானது ஒரு நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்துதல்;

(எ) பணச்சூதாட்டத்தின் நேர்மையையும் நியாயத்தன்மையையும் உறுதிப்படுத்துதலும் பொறுப்பற்ற பணச்சூதாட்டத் திட்டங்களையும் செயல்முறைகளையும் தடைசெய்தலும்;

(ஏ) பணச்சூதாட்டமானது குறைந்தபட்ச நியமமொன்றைப் பேணுவதற்கும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்குமான வசதிகளை வழங்குதல்;

(ஐ) பணச்சூதாட்டத்தின்மூலம் விளைவிக்கப்பட்ட தீங்கைக் குறைப்பதற்கெனப் பொறுப்புள்ள பணச்சூதாட்டத்தை வளர்த்தல்;

(ஒ) பணச்சூதாட்டத்தில் சட்டமுறையற்ற செயற்பாட்டைத் தடுத்தல்;

(ஓ) பணச்சூதாட்டத்துடன் இணைந்த சமூகத்தீங்கை மிகக்குறைந்ததாக்குதல்;

(ஔ) குற்றச்செயல்களின் அல்லது அமைதிக்குலைவின் மூலமொன்றாக இருப்பதிலிருந்து பணச்சூதாட்டத்தைத் தடுத்தல்;

(க) பணச்சூதாட்டச் செயற்பாடுகள் அல்லது பணச் சூதாட்டத்துடன் தொடர்புபட்ட செயற்பாடுகள் குற்றச்செயல்களின் வரும்படிகளைத் தூய்தாக்கு வதற்குப் பிறழ்பயன்பாடு செய்யப்படுவதனைத் தடுத்தல்; அத்துடன்

(ங) சிறுவர்களைப் பணச்சூதாட்டத்திலிருந்து பாது காத்தல்.

## பாகம் I

## பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகார சபையைத் தாபித்தல்

பணச் சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையைத் தாபித்தல்

**4.** (1) (இச்சட்டத்தில் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை எனவறியப்படவேண்டியதுமான அதிகாரசபை யொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டி ணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டுமென்ப துடன் இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினை யொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அப்பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

அதிகார சபையின் தத்துவங்கள்

**5.** அதிகாரசபையின் தத்துவங்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) பணச்சூதாட்டத்தின் அபிவிருத்திக்கு உகந்த மூலோபாயங்களைத் தொடக்கிவைத் தலும், அபிவிருத்திசெய்தலும், நடைமுறைப் படுத்துதலும்;

(ஆ) பணச்சூதாட்டம் தொடர்பான ஏதேனும் உரிமத்தை வழங்குதலும், புதுப்பித்தலும், இடைநிறுத்துதலும் அல்லது இல்லாதாக்குதலும்;

(இ) பணச்சூதாட்ட வளவுகளைப் பதிவுசெய்தலும் அத்தகைய பதிவை இடைநிறுத்துதலும் அல்லது இல்லாதாக்குதலும்;

(ஈ) உரிமம்பெற்றவரின் செயல்நிறைவேற்றுகையை யும் இணங்கியொழுகுகையையும் மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டு முறைமை யொன்றைத் தாபித்தலும் பேணுதலும் அத்த கைய மதிப்பீடுகளை அதிகாரசபையின் அலுவலகமுறையான வலைத்தளத்தின்மீது வெளியிடுதலும்;

(உ) உரிமம்பெற்றவர்களுக்குப் பணிப்புரைகளை வழங்குதலும் உரிமத்தின்மீது அத்தகைய நியதி நிபந்தனைகளை விதித்தலும்;

(ஊ) பின்வருவன தொடர்பில் விதிகளை ஆக்குதலும் வழிகாட்டுநெறிகளை வழங்குதலும் : -

(i) பணச்சூதாட்ட இடத்தை அல்லது வளவு களை மற்றும் பணச்சூதாட்டத்துக்காகவும் பணச்சூதாட்டத்துக்காக வழங்கப்பட்ட சேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்ட எவையேனும் துணைநிலையான கட்டிடங் களைப் பயன்படுத்துவதற்கும்; அத்துடன்

(ii) 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி பணம் தூய்தாக்கலையும் 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி பயங் கரவாதத்துக்கு நிதியளித்தலையும் தடுப்பதற்கும், 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகு வதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தினதும்

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத் தினதும் ஏற்பாடுகளின்கீழ் நடைமுறைப் படுத்தப்படவேண்டிய வழிமுறைகள் மற்றும் அவற்றின் நடைமுறைப்படுத் துகையைக் கண்காணிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்கும்;

(எ) சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகவல்களை, ஆவணங்களை மற்றும் புத்தகங்களைக் கொடுத்துதவும்படி அல்லது இச்சட்டத்தின்கீழான ஏதேனும் பணச்சூதாட்டச் செயற்பாடு தொடர்பான ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது கருமம் தொடர்பில் விசாரணைசெய்யப்படும் நோக்கத்துக்காகக் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்தில் சபையின்முன்னர் வருகைதரும்படி ஓர் உரிமம்பெற்றவரை அல்லது வேறெவரேனு மாளைத் தேவைப்படுத்துதல்;

(ஏ) ஏதேனும் பணச்சூதாட்ட இடத்தினுள் அல்லது வளவுகளினுள் அல்லது அத்தகைய வளவுகளிலுள்ள ஏதேனும் கட்டிடத்தினுள் பிரவேசித்தலும், அதனைத் தேடுதலும், சோதனையிடுதலும்;

(ஐ) நிகழ்நிலைப் பணச்சூதாட்டத்தில் ஈடுபடுகின்ற நிகழ்நிலை வாயில்களை அணுகுவதற்கு அல்லது அத்தகைய வாயில் வலைத்தளங்களினுட் பிரவேசிப்பதற்கு அதிகாரசபையினால் அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரை அனுமதித்தல்;

(ஒ) அதிகாரசபையினால் ஆற்றப்பட்ட ஏதேனும் சேவைக்காகக் கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளை அறவிடுதல்;

(ஓ) அதிகாரசபையின் குறிக்கோள்களை நிறை வேற்றுவதற்கு அவசியமானவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக் கைகளையும் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது அதிகாரசபையினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர்

அல்லது முகவரினூடாக நேரடியாக வல்லாமலுஞ்சரி, செய்துகொள்ளுதலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும்;

(ஔ) அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் அங்கீகரிக் கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந் தனைகளின்மீது, பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணத் தொகைகளைக் கடனாகப்பெறுதல்;

(க) அதிகாரசபையின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்தலும், வைத்திருத்தலும் அல்லது அதிகாரசபையினால் கொள்வனவுசெய்யப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் குத்தகைக்குக் கொடுத்தலும், ஈடுவைத்தலும், அடைமானம் வைத்தலும், விற்பனைசெய்தலும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தலும்;

(ங) அதிகாரசபையின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும், சேவையாளர் களையும், முகவர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், அவர்களுக்கு ஊதியமளித்தலும் மற்றும் அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும்;

(ச) அதிகாரசபையின் அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் பயிற்சியளித்தல்;

(ஞ) அதிகாரசபையினது பணிகளின் நிறைவேற் றுகையை வசதிப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய ஏதேனும் குழுவை அல்லது எவையேனும் குழுக்களை நியமித்தல்; அத்துடன்

(ட) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு உகந்தனவாகவிருக்கக்கூடிய அல்லது இடை நேர் விளைவானவையாகவிருக்கக்கூடிய அத்தகைய

வேறெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

**6.** அதிகாரசபையின் கடமைகளும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்:- அதிகார சபையின் கடமைகளும் பணிகளும்

(அ) பணச்சூதாட்டத் தொழிற்பாடுகளை ஒழுங்குபடுத்துதலும், கண்காணித்தலும், மேற்பார்வை செய்தலும், கட்டுப்படுத்துதலும்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட ஏதேனும் செயற்பாட்டின் நடாத்துகையையும் தொழிற்பாட்டையும் மேற்பார்வை செய்தலும் கட்டுப்படுத்துதலும்;

(இ) சட்டவிரோதமான பணச்சூதாட்டத்தையும் இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட ஏதேனும் செயற்பாட்டிலான வேறு துர்ப்பழக்கங்களையும் தடுப்பதற்காகவும் பணச்சூதாட்டத்தில் மோசடியைக் கண்டுபிடிப்பதற்காகவும் பொலிசாருடன் ஒருங்கிணைதல்;

(ஈ) காப்பு, சௌகரியம் மற்றும் சுகாதார நியமங்கள், பாதுகாப்பு, ஒழுக்காறு மற்றும் மோசடியைத் தடுத்தல் என்பனவுட்பட்ட எல்லா அம்சங்களிலும் உரிமம்பெற்றவர்கள் தமது பொறுப்புக்களைப் பயனுற நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துதல்;

(உ) பணம் தூய்தாக்கலுக்கும் வேறு கள்ளமான நிதிசார் செயற்பாட்டுக்கும் ஆபத்து வெளிக்காட்டுகையை மதிப்பீடுசெய்வதற்கென ஓர் ஆபத்து மதிப்பீட்டை நாடாத்துதலும் பணச்சூதாட்டத்தில் அந்த ஆபத்துக்களைத் தணிப்பதற்கும், முகாமை செய்வதற்கும், கண்காணிப்பதற்கும் பயனுள்ள வழிமுறைகளை எடுத்தலும்;

(ஊ) பணச்சூதாட்டம் தொடர்பான ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாடுபற்றிப் புலனாய்வுகளை நிறைவேற்றுதலும் அத்தகைய தோதான நடவடிக்கையை எடுத்தலும்;

(எ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக ஏதேனும் அரச வங்கியில் அல்லது அரச

நிதிநிறுவனத்தில் நடப்பு, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்;

(ஏ) இலங்கையிலுள்ள பணச்சூதாட்டச் செயற்பாடுகள் தொடர்பான எல்லா விபரங்களையும் இலங்கையில் அத்தகைய செயற்பாட்டைத் தொழிற்படுத்தி அதில் ஈடுபடுவதற்கு இணங்கியொழுகப்படவேண்டிய தேவைப்பாடுகளையும் உள்ளடக்குகின்ற அதிகாரசபைக்கான அலுவலகமுறையான வலைத்தளமொன்றை உருவாக்குதலும் பேணுதலும்; அத்துடன்

(ஐ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு உகந்தனவாகவிருக்கக்கூடிய அல்லது அதன் இடைநேர்விளைவானவையாகவிருக்கக்கூடிய அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

பாகம் II

## அதிகாரசபையை நிருவகித்தலும் முகாமைசெய்தலும்

முகாமைச் சபையின் அமைப்பு

**7.** (1) அதிகாரசபையின் அலுவல்களை நிருவகித்தலும், முகாமைசெய்தலும், கட்டுப்படுத்துதலும் (இச்சட்டத்தில் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒரு முகாமைச் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையானது, அதிகாரசபையின் அலுவல்களை நிருவகிக்கின்ற நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் அதிகார சபைக்கு அளிக்கப்பட்ட, குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பதவிவழி உறுப்பினர்கள், அதாவது-

(i) (இச்சட்டத்தில் செயலாளர் எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்;

(ii) உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர்;

(iii) 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறின் தலைவர் அல்லது அவரது நியமத்தர்; அத்துடன்

(iv) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர்; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப் படுகின்றவர்களும்) பொருளியல், கணக்கியல், சட்டம், அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் என்ற துறைகளுள் எவற்றிலும் தகைமைகளும் அனுபவமும் கொண்டுள்ளவர்களும் பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்துவதில் அறிவுள்ளவர்களுமான ஆட்களிடையேயிருந்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்.

சபையின் தவிசாளர்

**8.** (1) அமைச்சர், சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவரைத் தவிசாளராகவிருப்பதற்கு நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தனது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை அமைச்சரினால் எத்தேதியன்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(3) அமைச்சர், அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங் களுக்காகத் தவிசாளர் பதவியிலிருந்து தவிசாளரை அகற்றலாம்.

(4) இரண்டாம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடு களுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம், சபையில் அவரின் உறுப்பாண்மைக் காலப்பகுதியாதல் வேண்டும்.

(5) தவிசாளரானவர், சுகவீனம், வேறு உடற் றகுதியீனங்கள், இலங்கையில் இல்லாமை என்ற காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவரது பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தற்காலிகமாக இயலாதவராக உள்ளவிடத்து, உறுப்பினரொருவராக அவரது வழமையான கடமைகளுடன்சேர்த்து மேலதிகமாகத் தவிசாளராகச் செயலாற்றுவதற்கு வேறெவரேனும் உறுப்பினரை அமைச்சர் நியமிக்கலாம்.

சபையின் உறுப்பின ரொருவராக நியமிக்கப்படு வதற்கான தகைமையீனங்கள்

9. ஆளொருவர் பின்வருமாறிருப்பின் சபையின் உறுப்பின ரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்; அத்தகைய ஆள்-

(அ) பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராகவிருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இராதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால்;

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்கவகையற்றவர் ஒருவராக அல்லது வங்கிமுறிந்தவர் ஒருவராக வெளிப்படுத்தப்பட்டிருந்த ஆளொருவராகவி ருந்து பொறுப்புவிடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவர் ஒருவராக அல்லது வங்கி முறிந்தவர் ஒருவராக இருந்தால்;

(ஈ) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்றதும் ஆறுமாதங்களுக்குக் குறையாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால்;

(உ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் உள்ள நீதிமன்றமொன்றினால் விதிக்கப் பட்ட தண்டனைத்தீர்ப்புக்கு உட்பட்டுக்

கொண்டிருந்தால் அல்லது உட்பட்டவராக இருந்திருந்தால்;

(ஊ) நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பின்வருவனவற்றில் ஏதேனும் உரிமையை வைத்திருந்தால் அல்லது நன்மையைத் துய்த்தால்:-

(i) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் தொழிற்படுகின்ற பணச்சூதாட்டத்தில்;

(ii) எவரேனும் பணச்சூதாட்ட உரிமம்வைத்திருப்பவரின் தொழிலொன்றில்; அல்லது

(iii) அதிகாரசபையினால் அல்லது அதன் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில்;

(எ) அதிகாரசபையினால் அல்லது அதன்சார்பில் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் இருந்தால்;

(ஏ) சபையின் உறுப்பினரொருவராக அவரது பணிகள் அவரினால் நிறைவேற்றப்படுவதனைப் பங்கமானமுறையில் பாதிக்கக்கூடிய சாத்தியங் கொண்டுள்ளவாறான ஏதேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறையைக் கொண்டிருந்தால்; அல்லது

(ஐ) எழுபது வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால்.

சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம்

**10.** சபையின் நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும், இறப்பின்மூலம், பதவியிலிருந்து விலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத்தேதியிலிருந்து மூன்றாண்டுகளைக்கொண்ட காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, தொடர்ச்சியானவையாயினுஞ்சரி அல்லது வேறுவகையானவையாயினுஞ்சரி, மேலதிகமான இரு காலப்பகுதிகளுக்கு மேற்படாமல் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவியகற்றுகை, பதவிவிலகுகை முதலியன

**11.** (1) சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர், எந்நேரத்திலும், அதற்கென அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தனது பதவியிலிருந்து விலகலாமென்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் தேதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

(2) அமைச்சர், அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங் களுக்காக, நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம். பதவியிலிருந்து அகற்றப்பட்ட நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சபையின் உறுப்பினரொருவராக மீளநியமிக்கப்படுவதற்கு அல்லது வேறேதேனும் தன்மையில் சபைக்குச் சேவையாற்றுவதற்குத் தகவுடையவராதலாகாது.

(3) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் இறப்பின் மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மூலம் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், அமைச்சர், 7 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோராளை நியமித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் சுகவீனம் காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாதிருப்பின், அமைச்சர், 7 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய உறுப்பினர் இல்லாதபோது அவரினிடத்திற் செயலாற்றுவதற்கு வேறெவரேனுமாளை நியமித்தல் வேண்டும்.

(5) சபையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அவரது வராமைபற்றித் தவிசாளருக்கு முற்கூட்டியே அறிவிக்காமல் சபையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதரத் தவறுமிடத்து, அத்தகைய உறுப்பினர் தனது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அமைச்சர், 7 ஆம்

பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறோர் ஆளை நியமித்தலும் வேண்டும்.

சபையின் கூட்ட நடப்பெண்ணும் கூட்டங்களும்

**12.** (1) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் எல்லாக் கூட்டங்களையும் கூட்டுதல் வேண்டும்.

(3) சபையின் கூட்டமொன்று, ஒன்றில்-

(அ) ஒரு கூட்டநடப்பெண்ணாக அமையும் எண்ணிக் கையினரான உறுப்பினர்கள், அக்கூட்டத்துக்காக நியமிக்கப்பட்ட இடத்திலும், தேதியிலும், நேரத்திலும் ஒன்றுகூடுவதன்மூலம்; அல்லது

(ஆ) பங்குபற்றுகின்ற மற்றும் கூட்டநடப்பெண்ணாக அமைகின்ற எல்லா உறுப்பினர்களும் கூட்டத்தின்போது ஒவ்வொரு பங்குபற்றுகின்ற உறுப்பினரையும் அதன்மூலம் சமகாலத்தில் பார்க்கவும் கேட்கவும் முடியுமானவர் களாகவிருக்கும் கட்புல-செவிப்புலத் தொடர் பாடல் வழிவகைகளின்மூலம்,

நடாத்தப்படலாம்.

(4) சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கேள்விகளும் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரினது வாக்கின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், தவிசாளர், அவரது வாக்குடன் சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) தவிசாளர், சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதிருக்கையில், சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட

எவரேனும் உறுப்பினர் சபையின் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(6) சபையின் கூட்டங்கள், காலத்துக்குக்காலம் அதிகார சபையினால் 77 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறைகளுக்கும் இசைந்தொழுக நடாத்தப்படுதல் வேண்டும்.

சபையின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் ஏதேனும் வெற்றிடம் காரணமாகச் செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதலாகாது

**13.** சபையானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பினும் செயலாற்றலாமென்பதுடன் சபையின் ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகவிருத்தலோ அல்லது செல்லுபடியற்றதாகவிருப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது.

அதிகாரசபையின் இலச்சினை

**14.** (1) அதிகாரசபையின் இலச்சினையானது-

(அ) சபையானது காலத்துக்குக்காலம் முடிபுசெய்யக் கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்; அத்துடன்

(இ) சபையின் வலுவளிப்புடனன்றியும் சபையின் இரு உறுப்பினர்களின் சமுகத்திலன்றியும் ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினையானது, எந்தச் சாதனங்களிலும் ஆவணங்களிலும் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களும் ஆவணங்களும்பற்றிய இடாப்பொன்றைச் சபையானது பேணுதல் வேண்டும்.

## பாகம் III

## பணச்சூதாட்டத்துக்கு உரிமமளித்தலும் வளவுகளைப் பதிவுசெய்தமைக்கான சான்றிதழும்

பணச் சூதாட்டத்துக்கு உரிமமளித்தல்

**15.** (1) ஆளொருவர், அந்நோக்கத்துக்காக இச்சட்டத்தின் 39 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதியதியினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழன்றி பணச்சூதாட்டத்தைக் கொண்டுநடாத்துதலாகாது.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, உரிமமொன்றை வழங்குவதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழான அவரது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் கையளிக்கலாம்.

உரிமத்துக்கான விண்ணப்பம்

**16.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பணச் சூதாட்டத்தைக் கொண்டுநடாத்துவதற்கான உரிமமொன்றுக் காக விண்ணப்பிக்கின்ற ஆளொருவர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் குறித் துரைக்கப்படக்கூடியவாறான குறைந்த பட்ச மூலதனத்துடன் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட கம்பெனி யொன்றாகவிருத்தல் வேண்டும்.

(2) உரிமமொன்றை வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப் படக்கூடியவாறானவொரு படிவத்தில் பணிப்பாளர் தலைமை யதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் தேவைப்பட்ட எல்லா விபரங் களினதும் பூரணமான மற்றும் செம்மையான தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட் பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமொன்றில்

அடங்கியுள்ள தகவல்களையும் விபரங்களையும் கவனத்துட்கொண்டும், உரிமமொன்று வழங்கப்படுவதற்கு விதித்துரைக்கப்படக்கூடியவாறான தேவைப்பாடுகளை விண்ணப்பகாரர் நிறைவேற்றியுள்ளாரெனத் திருப்திப் படுவதன்மேலும், அத்தகைய உரிமத்தை விண்ணப்பகாரருக்கு வழங்குதல் வேண்டும்.

(5) (அ) பணிப்பாளர் தலைமையதிபதி, ஓர் உரிமத்தை வழங்குமுன்னர், விதித்துரைக்கப்படக்கூடியவாறானவொரு முறையில் கம்பெனியின் பொருத்தமான தன்மையையும் தகுதியையும் மதிப்பீடுசெய்வதற்கு (2) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட கம்பெனியின் பணிப்பாளர்கள், சிரேட்ட முகாமையாளர்கள், பங்குதாரர்கள், முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் பயனுகர் சொந்தக்காரர்கள் என்போரின் தகவல்களையும் விபரங்களையும் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ)வின்கீழான தகவல்களையும் விபரங் களையும் கவனத்துட்கொள்வதன்மேல், கம்பெனியின் எவரேனும் பணிப்பாளர், சிரேட்ட முகாமையாளர், பங்குதாரர், முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் என்போர் அல்லது பயனுகர் சொந்தக்காரர்கள் அத்தகைய கம்பெனியின் அத்தகைய பதவியை வகிப்பதற்குத் தகுதியற்றவர்களென்ற கருத்தைப் பணிப்பாளர் தலைமையதிபதி கொண்டிருப்பின்,-

(i) அதற்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுடன் அத்தகைய விண்ணப்பங்களை நிராகரித்தல் வேண்டும்; அல்லது

(ii) இப்பிரிவின்கீழ் அத்தகைய பதவியை வகிப்பதற்குத் தகுதியற்றவராகவுள்ளாரெனப் பணிப்பாளர் தலைமையதிபதி மதிப்பீடு செய்கின்ற எவரேனும் ஆள், உரிமமானது செல்லுபடியாகவிருக்கும்வரை கம்பெனியில் அத்தகைய பதவியை வகித்தலாகாதென்ற நிபந்தனைக்கமைய உரிமத்தை வழங்குதல் வேண்டும்.

(6) பொய்யான, பிழைவழியுய்க்கின்ற அல்லது பிழையான தகவல்களை அல்லது விபரங்களைக் கொண்டுள்ளதெனக் காணப்படும் விண்ணப்பமொன்று நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

வளவுகளைப் பதிவு செய்தமைக் கான சான்றிதழுக் கான விண்ணப்பம்

**17.** (1) பதினாறாம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பணச் சூதாட்டத்தைக் கொண்டுநடாத்துவதற்கு எக்கம்பெனிக்கு உரிமம் வழங்கப்படுகின்றதோ அக்கம்பெனியொன்று பணச்சூதாட்டத் தொழிற்பாடு இடம்பெறுகின்ற வளவுகளை அந்நோக்கத்துக்காகப் பதிவுசெய்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வளவுகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், ஒழுங்கு விதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறானவொரு படிவத்தில் பணிப்பாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் தேவைப்பட்ட எல்லா விபரங்களும்பற்றிப் பூரணமான மற்றும் செம்மையான தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்தனுப்பப் படுதலும் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமொன்றில் அடங்கியுள்ள தகவல்களையும் விபரங்களையும் கவனத்துட்கொண்டும், பதிவு செய்யப்படுவதற்கு விதித்துரைக்கப்படக்கூடிய வாறானவையும் பொருத்தமானதன்மை தொடர்பிலான வையுமான தேவைப்பாடுகளை விண்ணப்பகாரர் நிறைவேற்றியுள்ளவிடத்தும், வளவுகளைப் பதிவுசெய்தமைக் கானவொரு சான்றிதழை விண்ணப்பகாரருக்கு வழங்குதல் வேண்டும்.

(5) பொய்யான, பிழைவழியுய்க்கின்ற அல்லது பிழையான தகவல்களை அல்லது விபரங்களைக் கொண்டுள்ளதெனக் காணப்படும் விண்ணப்பமொன்று நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

எண்ணிமப் பணச் சூதாட்டம்

**18.** (1) ஓர் உரிமம்பெற்றவர் எண்ணிமப் பணச்சூதாட்ட உரிமமொன்றை வைத்திருந்தாலொழிய, அத்தகைய உரிமம் பெற்றவர் எண்ணிமப் பணச்சூதாட்டத்தைக் கொண்டு நடாத்துதலாகாது.

(2) பதினாறாம் பிரிவின் ஏற்பாடுகள் எண்ணிமப் பணச்சூதாட்ட உரிமத்துக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடை யனவாதல் வேண்டும்.

(3) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் எண்ணிமப் பணச்சூதாட்டத்தை உரிமம்பெற்றவர் ஒருவர் கொண்டுநடாத்தலாம்.

அதிகாரமளிக் கப்பட்ட பணச்சூதாட்டம்

**19.** (1) அமைச்சர், காலத்துக்குக்காலம், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கொண்டுநடாத்துவதற்கு அதிகாரமளிக் கப்படவேண்டிய, எண்ணிமப் பணச்சூதாட்டம் உட்பட்ட, பணச்சூதாட்ட வகைகளைக் குறித்துரைக்கலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட பணச்சூதாட்ட வகையொன்று தவிர்ந்த ஏதேனும் பணச்சூதாட்டத்தைக் கொண்டுநடாத்துவதற்கு ஆளொருவர் அனுமதிக்கப்படுதலாகாது.

பணச்சூதாட்ட விதிகள், பணச் சூதாட்ட நிரல் மற்றும் பணயங்களின் எண்ணிக்கை

**20.** (1) ஒவ்வோர் உரிமம்பெற்றவரும், ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான எவையேனும் ஆதாரப் படுத்துகின்ற ஆவணங்களுடன்சேர்த்து, விளையாடுவதற்குக் கிடைக்கக்கூடிய பணச்சூதாட்ட நிரலொன்று மற்றும் ஒவ்வொரு பணச்சூதாட்டத்துக்கும் அனுமதிக்கப்பட்ட பணயங்களினது ஓர் அதிகபட்ச எண்ணிக்கை என்பன உட்பட, பணச்சூதாட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட விதிகளை அதிகாரசபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான சமர்ப்பிப்பு பெறப்பட்டதன் மேல், அதிகாரசபையானது, இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு, உத்தேசிக் கப்பட்ட விதிகளையும், பணச்சூதாட்ட நிரலையும், பணயங் களின் ஓர் அதிகபட்ச எண்ணிக்கையையும் பரிசீலனைசெய்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது, அவசியமாயின், குறித்துரைக்கப் பட்டவொரு காலப்பகுதியினுள் உரிமம்பெற்றவரிடமிருந்து மேலதிகத் தகவல்களை அல்லது தெளிவுபடுத்துகையைத் தேவைப்படுத்தலாம்.

(4) அதிகாரசபையானது, பூரணமான சமர்ப்பிப்பு கிடைக்கப்பெற்றதன்மேல், ஒன்றில் விதிகளை, பணச்சூதாட்ட நிரலை மற்றும் பணயங்களின் ஓர் அதிகபட்ச எண்ணிக்கையை எழுத்தில் அங்கீகரித்தல் வேண்டும் அல்லது நிராகரிப்புக்காகக்

குறித்தளிக்கப்பட்ட எழுத்திலான காரணங்களை அறிவித்தல் வேண்டும்.

(5) நிராகரிக்கப்படின், உரிமம்பெற்றவர், அதிகார சபையினால் அடையாளங் காணப்பட்ட குறைவுபாடுகளை விளித்துரைத்து மீளாய்வுசெய்யப்பட்ட விதிகளை மீளச்சமர்ப்பிக்கலாம்.

(6) சமர்ப்பிப்பதற்கான படிவமும் முறையும், அத்தகைய சமர்ப்பிப்பைச் செய்முறைப்படுத்துவதற்கான கட்டணம் ஏதேனுமிருப்பின் அது, பரிசீலனை மற்றும் அங்கீகாரத்துக்கான காலஎல்லை, மற்றும் பணச்சூதாட்ட விதிகளை, பணச்சூதாட்ட நிரலை அத்துடன் பணயங்களின் ஓர் அதிகபட்ச எண்ணிக்கையை அங்கீகரிப்பதற்கான கட்டளைக்கற்கள் என்பன, ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக இருத்தல் வேண்டும்.

உரிமத்தையும், வளவுகளைப் பதிவு செய் தமைக்கான சான்றிதழையும், விதிகளையும் வெளிக்காட்டி வைத்தல் முதலியன

**21.** ஒவ்வோர் உரிமம்பெற்றவரும், பணச்சூதாட்டத்துக் காகப் பணச்சூதாட்ட வளவுகள் திறந்திருக்கும்போது எல்லா நேரங்களிலும் வளவுகளில் துலாம்பரமானவோர் இடத்தில் பின்வருவனவற்றை வெளிக்காட்டிவைத்தல் வேண்டும்:-

(அ) அவரது உரிமத்தையும் உரிமத்தின் நிபந் தனைகளையும்;

(ஆ) வளவுகளின் பதிவுச் சான்றிதழையும்;

(இ) விளையாடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பணச்சூதாட்டத்தையும் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அதிகபட்சப் பணயங் களையும்; அத்துடன்

(ஈ) அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட பணச்சூதாட்ட விதிகளையும்.

பணச்சூதாட்டம் தொடர்பான அதிகாரமளிக் கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

**22.** பணச்சூதாட்டம் தொடர்பான ஏதேனும் கொடுக்கல் வாங்கல், 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தினதும் 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அல்லது விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் தேவைப்

பாட்டுக்கு அமைய, பணச்சூதாட்டத் தொழிற்படுத்துநரினால் நிறுவப்பட்ட ஒரு பிரதானப் பணக் கருமபீடத்தில் நாணயமாக அல்லது ஒரு பற்று அல்லது வரவு அட்டைமூலம் செய்யப்படுதல் வேண்டும்.

உரிமமொன்றின் அல்லது வளவுகளைப் பதிவு செய்தமைக் கான சான்றிதழொன்றின் படிவமும் கால எல்லையும்

**23.** பிரிவுகள் 16 மற்றும் 17 இன்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றும் வளவுகளைப் பதிவுசெய்தமைக்கான சான்றிதழும்-

(அ) அதிகாரசபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலிருத்தல் வேண்டும்;

(ஆ) உரிமத்தில் அல்லது வளவுகளைப் பதிவுசெய் தமைக்கான சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட வாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கு அமையவிருத்தல் வேண்டும்;

(இ) உரிமத்தில் அல்லது வளவுகளைப் பதிவுசெய் தமைக்கான சான்றிதழில் குறித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) முன்னரே இல்லாதொழிக்கப்பட்டாலொழிய, உரிமத்தில் அல்லது வளவுகளைப் பதிவுசெய் தமைக்கான சான்றிதழில் குறித்துரைக் கப்பட்டவாறான காலப்பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.

உரிமமொன்றையும் வளவுகளைப் பதிவு செய்தமைக்கான சான்றிதழையும் புதுப்பித்தல்

**24.** (1) பிரிவுகள் 16 மற்றும் 17 இன்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றும் வளவுகளைப் பதிவுசெய்தமைக்கான சான்றிதழும், முன்னர் வழங்கப்பட்ட அவ்வுரிமம் அல்லது வளவுகளைப் பதிவுசெய்தமைக்கான சான்றிதழ் முடிவுறும் தேதிக்குமுன்னர் முப்பது நாட்களுக்குக் குறையாமல், விதித்துரைக்கப்பட்ட புதுப்பித்தற் கட்டணத்துடன் சேர்த்து ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறானவொரு படிவத்தில் அந்நோக்கத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படுவதன்மேல் புதுப்பிக் கப்படலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மீது,

பின்வருமிடத்து ஓர் உரிமத்தை அல்லது வளவுகளைப் பதிவு செய்தமைக்கான சான்றிதழைப் புதுப்பித்தல் வேண்டும்:-

(அ) வழங்கப்பட்ட உரிமத்தின் அல்லது வளவுகளைப் பதிவுசெய்தமைக்கான சான்றிதழின் நியதிநிபந்தனைகளை உரிமம்பெற்றவர் மீறாதவிடத்து அல்லது அவற்றுக்கு முரணாக எதனையும் செய்திராதவிடத்து;

(ஆ) உரிமம்பெற்றவர் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளை மீறாதுள்ளவிடத்து;

(இ) உரிமம்பெற்றவர் 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின், 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாயச் சட்டத்தின், 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அல்லது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் அல்லது அச்சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள், கட்டளைகள் அல்லது பணிப்புகளை மீறாதுள்ளவிடத்து;

(ஈ) சம்பந்தப்பட்ட பணச்சூதாட்டத்தின் தொடர்ச்சி, பொதுமக்களின்மீது ஏதேனும் பாதகமான தாக்கத்தைக் கொண்டிராதவிடத்து;

(உ) பொதுமக்களின் முறைப்பாடெதுவும் இல்லாதவிடத்து; அல்லது

(ஊ) உரிமம்பெற்றவரின் சொந்தக்காரர் அல்லது எவரேனும் பணிப்பாளர், முகாமையாளர், பங்குதாரர் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கெதிராக முடிவுறாத குற்றவியற் புலனாய்வெதுவும் இல்லாதவிடத்து.

(3) இருபத்திமூன்றாம் பிரிவின் ஏற்பாடுகள், இப்பிரிவின் கீழான புதுப்பித்தலின்மீது வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அல்லது வளவுகளைப் பதிவு செய்தமைக்கான சான்றிதழின் படிவம் மற்றும் காலஎல்லை தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

காரணங்கள் அறிவிக்கப் படுதல் வேண்டும்

**25.** விடயத்துக்கேற்ப, பிரிவு 16, 17 அல்லது 24 இன்கீழ் ஓர் உரிமத்தின் அல்லது வளவுகளைப் பதிவுசெய்தமைக்கான சான்றிதழின் வழங்குகைக்கான அல்லது அதன் புதுப்பித்தலுக்கான விண்ணப்பமொன்று மறுக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய மறுப்புக்கான காரணங்கள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பதியப்படுதல் வேண்டும். அத்தகைய மறுப்புக்காகக் குறித்தளிக்கப்பட்ட காரணங்கள் பற்றி, அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யும் ஆளுக்கு, விண்ணப்பத்தில் காணப்படுகின்ற முகவரிக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப் பட்ட எழுத்திலான தொடர்பாடல் மூலம் அறிவிப்பது பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

உரிமத்துக்கான அல்லது வளவுகளைப் பதிவுசெய்தமைக் கான சான்றிதழுக்கான திருத்தங்கள்

**26.** பிரிவுகள் 16, 17 மற்றும் 20 ஆகியவற்றின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அத்தகைய உரிமத்தை, வளவுகளைப் பதிவுசெய்தமைக்கான சான்றிதழை, விதிகளை, பணச்சூதாட்ட நிரலை மற்றும் பணயங்களின் ஓர் அதிகபட்ச எண்ணிக்கையைத் திருத்துவதற்கான ஒரு விண்ணப்பம் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

உரிமத்தைக் கைமாற்றுவதன் மீதான மட்டுப்பாடு

**27.** ஓர் உரிமமும், மற்றும் உரிமத்தின்கீழான எவையேனும் உரிமைகளும், நன்மைகளும் அல்லது சிறப்புரிமைகளும், பின்வருமாறு இருந்தாலொழிய, வேறெவரேனுமாளுக்குக் கைமாற்றப்படத்தக்கனவாக அல்லது சாட்டுதல் செய்யப் படத்தக்கனவாக இருத்தலாகாது:-

(அ) கைமாற்றத்தை அல்லது சாட்டுதலை அதிகாரமளிக்கின்ற நிபந்தனையொன்றை உரிமம் கொண்டிருந்தாலொழியவும்; அத்துடன்

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி, கைமாற்றத்துக்கு அல்லது சாட்டுதலுக்கு எழுத்தில் சம்மதித்து சபையானது அத்தகைய கைமாற்றத்தை அல்லது சாட்டுதலை அங்கீகரித்தாலொழியவும்.

கூட்டிணைப்புக் கட்டுப்பாட்டி லான மாற்றம் பற்றிய அறிவிப்பு

**28.** (1) கூட்டிணைப்புக் கட்டுப்பாட்டிலான ஏதேனும் மாற்றம் இடம்பெறுவதிலிருந்து ஒரு மாதத்தினுள் உரிமம்பெற்றவர் அத்தகைய மாற்றம்பற்றி எழுத்தில் அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "கூட்டிணைப்புக் கட்டுப்பாடு" என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) உரிமம்பெற்றவரிலான பங்குகளின் அல்லது வாக்களிக்கும் உரிமைகளின் ஐம்பது சதவீதத்தின் அல்லது அதற்கு மேற்பட்டதன் சொத்தாண்மையிலான ஒரு மாற்றம்;

(ஆ) பணிப்பாளர் சபையின் அமைப்பிலான ஒரு மாற்றம்; அல்லது

(இ) ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறு உரிமம்பெற்றவரின் முகாமைத் துவத்தை அல்லது தொழிற்பாட்டைப் பாதிக்கக்கூடிய வேறேதேனும் மாற்றம்.

ஓர் உரிமத்தை அல்லது வளவுகளைப் பதிவுசெய்தமைக் கான சான்றிதழை இடை நிறுத்துதல்

**29.** (1) பிரிவு 16 அல்லது 17 இன் கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமம் அல்லது வளவுகளைப் பதிவுசெய்தமைக்கான சான்றிதழ் பின்வருமிடத்து அதிகாரசபையினால் இடைநிறுத்தப்படலாம்:-

(அ) சபையினால் செய்யப்பட்டவொரு தீர்மானத்தின் விளைவாகக் கடைப்பிடிக்கப்பட்ட எவையேனும் பாதுகாப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கென அது அவசியமாக வருமிடத்து;

(ஆ) இச்சட்டத்தின் கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் கீழான தவறொன்றைப் புரிந்தமைக்காக உரிமம் பெற்றவர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(இ) உரிமம்பெற்றவர் இச்சட்டத்தின், 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின், 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான

சமவாயச் சட்டத்தின், 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அல்லது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் அல்லது அச்சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள், கட்டளைகள் அல்லது பணிப்புகளை மீறியுள்ளவிடத்து மற்றும் அத்தகைய மீறுகையின் பாரதூரமானதன்மை உரிமத்தின் இல்லாதாக்குகையை அனுமதிக்காதவிடத்து.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வருவனவற்றின் ஏற்பாடுகளின்கீழான ஒரு குற்றத்தீர்ப்புத் தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் ஓர் உரிமத்தை அல்லது வளவுகளைப் பதிவுசெய்தமைக்கான சான்றிதழை இடைநிறுத்துவதற்குமுன்னர், அதாவது-

(அ) 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின், 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாயச் சட்டத்தின், 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது அச்சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள், கட்டளைகள் அல்லது பணிப்புகளின்கீழ் 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறைக் கலந்தாலோசித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள், கட்டளைகள் அல்லது பணிப்புகளின்கீழ்

2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(3) உரிமம் அல்லது வளவுகளைப் பதிவுசெய்தமைக்கான சான்றிதழ் ஒன்று, (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் இடைநிறுத்தப்படுமிடத்து, உரிமம்பெற்றவர், உரிமத்தின் அல்லது பதிவுச் சான்றிதழின் வழங்குகைக்காக அவரினால் செலுத்தப்பட்ட கட்டணத்தின் தகவுக்கேற்ற மீளளிப்பொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

ஓர் உரிமத்தின் அல்லது வளவு களைப் பதிவு செய்தமைக்கான சான்றிதழின் இல்லாதாக்குகை

**30.** (1) பிரிவு 16 அல்லது 17 இன்கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமம் அல்லது வளவுகளைப் பதிவு செய்தமைக்கான சான்றிதழ், பின்வருமிடத்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் இல்லாதாக்கப்படுதல் வேண்டும்:-

(அ) பொய்யான, பிழைவழியுய்க்கின்ற அல்லது செம்மையற்ற தகவல்களை வழங்கியதன்மூலம் உரிமம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதெனக் காணப்படுமிடத்து;

(ஆ) உரிமம்பெற்றவர் இச்சட்டத்தின், 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின், 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின், 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அல்லது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின்கீழான அல்லது அச்சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்கு விதிகள், விதிகள், கட்டளைகள் அல்லது பணிப்புகளின்கீழான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து;

(இ) அத்தகைய உரிமம் அல்லது பதிவுச் சான்றிதழ் எந்த நியதிகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு அமைய வழங்கப்பட்டதோ அந்த எவையேனும்

நியதிகளை அல்லது நிபந்தனைகளை மீறி அல்லது அவற்றுக்கு முரணாக உரிமம்பெற்றவர் செயலாற்றியுள்ளவிடத்து; அல்லது

(ஈ) பணச்சூதாட்டத் தொழிற்பாட்டின் தொடர்ச்சி பொதுமக்களின்மீது பாதகமானவொரு தாக்கத்தைக் கொண்டிருக்குமிடத்து.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வருவனவற்றின் ஏற்பாடுகளின்கீழான ஒரு குற்றத்தீர்ப்புத் தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஓர் உரிமத்தை அல்லது வளவுகளைப் பதிவு செய்தமைக்கான சான்றிதழை இல்லாதாக்குவதற்குமுன்னர், அதாவது-

(அ) 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின், 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாயச் சட்டத்தின், 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது அச்சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள், கட்டளைகள் அல்லது பணிப்புகளின்கீழ் 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறைக் கலந்தாலோசித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள், கட்டளைகள் அல்லது பணிப்புகளின்கீழ் 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

காரணங் காட்டுவதற்கான அறிவித்தல்

**31.** (1) அதிகாரசபையானது, விடயத்துக்கேற்ப, 29 ஆம் அல்லது 30 ஆம் பிரிவின்கீழ் ஓர் உரிமத்தை அல்லது வளவுகளைப் பதிவுசெய்தமைக்கான சான்றிதழை இடைநிறுத்துமுன்னர் அல்லது இல்லாதாக்குமுன்னர், நடவடிக்கைக்கான ஏதுக்களைக் குறித்துரைத்து உரிமம் பெற்றவருக்கு எழுத்திலான அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான அறிவித்தலொன்று, உரிமம் அல்லது வளவுகளைப் பதிவு செய்தமைக்கான சான்றிதழ் ஏன் இடைநிறுத்தப்படலாகாது அல்லது இல்லாதாக்கப்படுதலாகாது என அறிவித்தல் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் காரணங்காட்டும்படி தேவைப்படுத்துதல் வேண்டும்.

(3) இறுதி முடிபொன்று செய்யப்படுமுன்னர் ஒன்றில் நேரடியாகவோ அல்லது ஓர் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவரினூடாகவோ கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்று உரிமம்பெற்றவருக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

(4) உரிமம்பெற்றவரினால் அல்லது அவரது பிரதிநிதியினால் செய்யப்பட்ட எவையேனும் முறையீடுகளைக் கவனத்துட் கொண்டதன்மேல் அதிகாரசபையானது எழுத்தில் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக உரிமத்தை அல்லது வளவுகளைப் பதிவுசெய்தமைக்கான சான்றிதழை இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

மேன்முறையீடுகள்

**32.** (1) ஓர் உரிமத்தின் அல்லது வளவுகளைப் பதிவுசெய்தமைக்கான சான்றிதழின் வழங்குகையை அல்லது புதுப்பித்தலை மறுக்கின்ற முடிபொன்றினால் அல்லது வழங்கப்பட்ட ஓர் உரிமத்தின் அல்லது வளவுகளைப் பதிவுசெய்தமைக்கான சான்றிதழின் இடைநிறுத்துகையினால் அல்லது இல்லாதாக்குகையினால் இன்னலுறும் எவரேனுமாள், விடயத்துக்கேற்ப, அத்தகைய மறுப்பை அல்லது இடைநிறுத்துகையை அல்லது இல்லாதாக்குகையை அத்தகைய ஆளுக்கு அறிவிக்கின்ற எழுத்திலான தொடர்பாடல் பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களினுள், அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின்மீதான முடிபு, அத்தகைய மேன்முறையீடு பெறப்பட்டதிலிருந்து அறுபது நாட்களினுள் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய மேன்முறையீட்டைச் செய்கின்ற ஆளுக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பு அளிக்கப்படுவதன்மேல் அம்முடிபானது அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(3) செயலாளர் தோதானதெனக் கருதுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் மேன் முறையீட்டின்மீது எழுத்திலான ஏதேனும் முடிபைச் செய்யுமுன்னர், விடயத்தின் சூழ்நிலைகளில் அவசியமெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய விசாரணையை செயலாளர் நடாத்தலாம் என்பதுடன் இரண்டு மாதகாலப்பகுதியினுள் முடிபொன்றைச் செயலாளர் வழங்குதலும் வேண்டும்.

(4) செயலாளரின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், சட்டவினாமீது, அத்தகைய முடிபு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

பணச்சூதாட்ட மென்பொருள்

**33.** (1) இச்சட்டத்தின் 39 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அந்நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழன்றி ஆளொருவர் பணச்சூதாட்ட மென்பொருளை அபிவிருத்தி செய்தலோ, விநியோகித்தலோ அல்லது தொழிற்படுத்துதலோ ஆகாது.

(2) ஒரு பணச்சூதாட்ட மென்பொருள் உரிமத்தின் வழங்குகைக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வருவன வற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) பணச்சூதாட்ட மென்பொருளின் சிறப்புக்கூறுகள், பணியாற்றுகைகள் மற்றும் உட்கருதப்பட்ட பாவனைபற்றிய விபரமான அளவுக்குறிப்பீடுகள்;

(ஆ) மென்பொருளானது ஏற்புடையற்பாலனவான நியமங்களுக்கு அமைந்தொழுகுகின்றதென உறுதிப்படுத்தி தராதர அங்கீகாரம்பெற்ற மூன்றாந் திறத்தவர்களான கணக்காய்வாளர் களிடமிருந்து இணங்கியொழுகுகைச் சான்றுப் படுத்துகைகள்; அத்துடன்

(இ) தரவுப் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் அதிகாரமளிக்கப்படாத அணுகுகை அல்லது தந்திரப்படுத்துகைக்கெதிரான இடர்காப்புகள் என்பனமீதான தகவல்கள்.

(3) பணச்சூதாட்ட மென்பொருளொன்று-

(அ) முரண்பாடுகள் அல்லது விளைவுகள் தொடர்பாகப் பாவனையாளர்களைப் பிழை வழியுய்ப்பதற்கு வடிவமைக்கப்பட்ட பொறி முறைகளை உள்ளடக்குதலாகாது;

(ஆ) சட்டப்படியான பணச்சூதாட்ட வயதுக்குக் கீழான தனியாட்களின் பங்குபற்றுகையை இயலச்செய் தலாகாது;

(இ) உரிமமளிக்கப்படாத அல்லது அதிகாரமளிக் கப்படாத பணச்சூதாட்டச் செயற்பாடுகளை வசதிப்படுத்துதலாகாது; அத்துடன்

(ஈ) விதித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் கணக் காய்வு செய்யப்பட்டுச் சான்றுப்படுத்தப்பட்ட வெளிப்படையான பதின்முறை இலக்கமானம் இன்றித் தொழிற்படுதலாகாது.

(4) அபிவிருத்தியாளரும் விநியோகிப்பாளரும்-

(அ) ஒழுங்குபடுத்தப்படாத தளங்களினூடாகப் பணச்சூதாட்ட மென்பொருளை விநியோகித்தல், விற்பனை செய்தல், அல்லது கிடைக்கக் கூடியதாக்குதல் ஆகாது;

(ஆ) செல்லுபடியான பணச்சூதாட்ட உரிமமொன்றை வைத்திருக்கின்ற உருவகங்களுக்கு மட்டுமே மென்பொருள் அணுகக்கூடியதாகவிருத்தலை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(இ) ஒவ்வொரு பணச்சூதாட்ட மென்பொருளும் பின்வருவனவற்றை உள்ளடக்குவதனை உறுதிப் படுத்துதல் வேண்டும்:-

(i) செலவழித்தல், நேரம் அல்லது இழப்புக்கள் மீது சுயவிதிப்பு எல்லைகளுக்கான

பாவனையாளரினால் அணுகத்தக்க கருவிகள்;

(ii) பணச்சூதாட்ட பழக்க அடிமைப்பாட்டுக்கும் வளங்களை ஆதாரப்படுத்துவதற்கான இணைப்புக்களின் ஆபத்துக்களும்பற்றித் துலாம்பரமான எச்சரிக்கைகள்; அத்துடன்

(iii) சுயதவிர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பதிவு செய்யப்பட்ட தனியாட்களினாலான அணுகுகையை அடையாளங்காண் பதற்கும் மட்டுப்படுத்துவதற்குமான பொறிமுறைகள்;

(ஈ) பாவனையாளர்களின் தனிப்பட்ட மற்றும் நிதிசார் தகவல்களை இடர்காப்பதற்கு 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுகள் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்; அத்துடன்

(உ) அதிகாரமளிக்கப்படாத தரவுச் சேகரிப்பு, பகிர்தல் அல்லது மீறுகைகளைத் தடுப்பதற்குக் கட்டுரமார்ந்த வழிமுறைகளை நடைமுறைப்படுத்துதல்.

(5) உரிமத்துக்காக விண்ணப்பித்தல், உரிமத்தை வெளிக்காட்டுதல், உரிமத்தின் படிவமும் காலஎல்லையும், உரிமத்தைப் புதுப்பித்தல், அறிவிக்கப்படவேண்டிய காரணம், ஓர் உரிமத்துக்கான திருத்தங்கள், உரிமத்தின் கைமாற்றுகை மீதான மட்டுப்பாடுகள், கூட்டிணைப்புக் கட்டுப்பாட்டின் மாற்றம்பற்றிய அறிவிப்பு, உரிமத்தை இடைநிறுத்துதல், உரிமத்தை இல்லாதாக்குதல், காரணங்காட்டுவதற்கான அறிவித்தல், மற்றும் மேன்முறையீடுகள் என்பன தொடர்பாக 16 ஆம், 21 ஆம் பிரிவுகள், மற்றும் 23 முதல் 32 வரையிலான பிரிவுகள் ஆகியவற்றின் ஏற்பாடுகள் ஒரு மென்பொருள் உரிமத்துக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

கப்பல்களின் மீதான பணச்சூதாட்டம்

**34.** (1) கப்பலொன்று இலங்கையில் பதிவுசெய்யப் பட்டுள்ளவிடத்தும் கப்பலுக்குச் சொந்தமான கம்பெனி அல்லது கப்பற்குத்தகைப்பத்திரத்தின்கீழ் கப்பலின் தொழிற்பாடுகளையும் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்து கின்ற குத்தகைபெறுநர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ்

வழங்கப்பட்ட செல்லுபடியானவோர் உரிமத்தைக் கொண்டுள்ளவிடத்தும், அத்தகைய கப்பல், உரிமத்திற் குறித்துரைக்கப்பட்ட நியதிநிபந்தனைகளுக்கமைய, இலங்கையின் நீர்ப்பரப்புகளினுள்ளும் ஆழ்கடலினுள்ளும் பணச்சூதாட்டத்துக்கு அனுமதிக்கப்படலாம்.

(2) கப்பலொன்று இலங்கையில் பதிவுசெய்யப் படாதுள்ளவிடத்தும் கப்பலுக்குச் சொந்தமான கம்பெனி அல்லது கப்பற்குத்தகைப்பத்திரத்தின்கீழ் கப்பலின் தொழிற்பாடுகளையும் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துகின்ற குத்தகைபெறுநர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியானவோர் உரிமத்தைக் கொண்டுள்ளவிடத்தும், அத்தகைய கப்பல், கப்பலின் சொத்தாண்மையைப் பொருட்படுத்தாது, உரிமத்திற் குறித்துரைக்கப்பட்ட நியதிநிபந்தனைகளுக்கமைய, அக் கப்பலானது இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் இருக்கும்போது பணச்சூதாட்டத்துக்கு அனுமதிக்கப்படலாம்.

**35.** (1) ஆளொருவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழன்றி, ஒரு மகிழ்வுலாத் தொழிற்படுத்துநராகத் தொழிற்படுதலாகாது. மகிழ்வுலா உரிமங்களும் தொழிற்படுத்து நர்களும்

(2) உரிமத்துக்காக விண்ணப்பித்தல், உரிமத்தை வெளிக்காட்டுதல், உரிமத்தின் படிவமும் காலஎல்லையும், உரிமத்தைப் புதுப்பித்தல், அறிவிக்கப்படவேண்டிய காரணம், ஓர் உரிமத்துக்கான திருத்தங்கள், உரிமத்தின் கைமாற்றுகைமீதான மட்டுப்பாடுகள், கூட்டிணைப்புக் கட்டுப்பாட்டின் மாற்றம்பற்றிய அறிவிப்பு, உரிமத்தை இடைநிறுத்துதல், உரிமத்தை இல்லாதாக்குதல், காரணங்களைக் காட்டுவதற்கான அறிவித்தல், மற்றும் மேன்முறையீடுகள் என்பன தொடர்பாக 16 ஆம், 21 ஆம் பிரிவுகள், மற்றும் 23 முதல் 32 வரையிலான பிரிவுகள் ஆகியவற்றின் ஏற்பாடுகள் மகிழ்வுலாத் தொழிற்படுத்துநர் உரிமத்துக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான ஒவ்வொரு விண்ணப்பகாரரும் ஒரு மகிழ்வுலாத் தொழிலைத் தொழிற்படுத்துவதற்கு அவரது நிதிசார் நிலையுறுதி, நேர்மை மற்றும் தகுதிபற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதியைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு மகிழ்வுலாத் தொழிற்படுத்துநரும், போஷகர்களினதும் நிதிசார் கையாளுகைகளினதும் விபரங்களுட்பட, அவரது தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் செயற்பாடுகளும்பற்றிச் செம்மையானவையும் பூரணமானவையுமான பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்.

(5) மகிழ்வுலாத் தொழிற்படுத்துநர்களுடன் ஈடுபடும் ஒவ்வோர் உரிமம்பெற்றவரும் மகிழ்வுலாத் தொழிற்படுத் துநரினால் உட்கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு போஷகரும் பணச்சூதாட்டச் செயற்பாடுகளில் உட்பிரவேசிப்பதற்கும் பங்குபற்றுவதற்குமான சட்டப்படியான தேவைப்பாடுகளை எதிர்கொள்வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(6) உரிமம்பெற்றவர் ஒருவர், மகிழ்வுலாத் தொழிற் படுத்துநரினாலான ஏதேனும் சந்தேகத்துக்கிடமான செயற்பாட்டை அல்லது ஒழுங்குவிதியின் ஏதேனும் மீறுகையைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(7) உரிமம்பெற்ற மகிழ்வுலாத் தொழிற்படுத்துநர்களின் தொழிற்பாடுகளைக் கணக்காய்வுசெய்வதற்கும், சோதனை யிடுவதற்கும், பரிசீலனைசெய்வதற்கும் அதிகாரசபை தத்துவமுடையதாதல் வேண்டும்.

## பாகம் IV

## அதிகாரசபையின் நிதியம்

அதிகார சபையின் நிதியம்

**36.** (1) அதிகாரசபை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன அதிகாரசபையின் நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) அதிகாரசபையின் பாவனைக்காகக் காலத் துக்குக்காலம் பாராளுமன்றத்தினால் வாக்களிக் கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) அதிகாரசபை இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) அதிகாரசபையின் வரவுக்குத் திரளுகின்ற எல்லாப் பணத்தொகைகளும்.

(3) சபையானது, இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் மற்றும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுவதற்குத் தேவைப் படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்

**37.** (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) சபையானது, அதிகாரசபையின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றித் தகுந்த கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வுசெய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலுக்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் II இன் ஏற்புடமை

**38.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள், அதிகாரசபையின் கணக்குகளினது கணக்காய்வுதவிர, அதன் நிதிசார் கட்டுப்பாட்டுக்கும் கணக்குகளுக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் V

## அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலரும் பணியாட்டொகுதியினரும்

அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி யொருவரை நியமித்தல்

**39.** (1) (இச்சட்டத்தில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சபையின் அங்கீகாரத்தின்மேல் அமைச்சரினால் நியமிக்கப்படும் அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியொருவர் இருத்தல் வேண்டும்; அவர் அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராக விருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அதிகாரசபையின் அலுவல்களினதும் கொடுக்கல் வாங்கல்களினதும் பணிப்பு, அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் பிரயோகம், புரிகை மற்றும் நிறைவேற்றுகை அத்துடன் அதிகாரசபையின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் நிருவாகமும் கட்டுப்பாடும் பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரசபையின் அங்கீகாரத்துடன், இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்குக் கையளிப்பது அவசியமென அவர் கருதும்போதெல்லாம் அவ்வாறு செய்யலாமென்பதுடன் அத்தகைய அலுவலர் அல்லது ஊழியர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய அத்தகைய தத்துவத்தை, பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்தளிக்கப்பட்ட அவரது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் சபைக்குப் பொறுப்பாகவிருத்தலும் வகைசொல்லவேண்டியவராகவிருத்தலும் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதி, சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தனது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராக உள்ளபோதெல்லாம், அமைச்சர்,

அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், அத்தகைய இல்லாமையின்போது அவரினிடத்திற் செயலாற்றுவதற்கு வேறோராளை நியமிக்கலாம்.

அதிகாரசபையின் பணியாட்டொகுதியினரும் ஊதியமும்

**40.** (1) சபையானது, தொழினுட்ப மற்றும் நிருவாக மற்றும் முகாமைத்துவ ஆளணியினர் அத்துடன் அதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு ஆட்கள் உட்பட, அதிகாரசபைக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களினதும் பணிகளினதும் வினைத்திறனான பிரயோகத்துக்காகவும் நிறைவேற்றுகைக்காகவும் தேவைப் படுகின்றவாறான அத்தகைய பணியாட்டொகுதியினரைத் தொழிலுக்கமர்த்துதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் பணியாட்டொகுதியினருக்கும், அமைச்சரினால் விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அவர்கள் அமைந் தோராதலும் வேண்டும்.

பகிரங்க அலுவலர்களை அதிகார சபையின் பணியாட் டொகுதிக்கு நியமித்தல்

**41.** (1) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் சம்மதத்துடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட் டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும், அவர்தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட் டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும், அவர்தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காக அரசாங்கத்துக்குச் சேவையாற்றுவதற்கு ஒப்பந்தமொன்றின் மூலம் உடன்பட்டு அரசாங்கத்துடன் அதனைச் செய்துகொண்டுள்ள எவரேனுமாளைச் சபையானது தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் அதிகார சபையுடனான ஏதேனும் சேவைக் காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பாகம் VI

**தவறுகள்**

உரிமமின்றிப் பணச் சூதாட்டத்தை நடாத்துதல்

**42.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியானவோர் உரிமமின்றி ஏதேனும் பணச்சூதாட்டத்தைக் கொண்டுநடாத்துகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

பொய்யான, பிழை வழியுய்க்கின்ற அல்லது செம்மையற்ற தகவல்களை வழங்குதல்

**43.** பொய்யான, பிழைவழியுய்க்கின்ற அல்லது செம்மையற்ற தகவல்களை வழங்கியமைமூலம் அல்லது ஏதேனும் முக்கியமான தகவலை அளிக்காதுவிட்டதன்மூலம் உரிமத்தைப் பெற்றுக்கொண்டுள்ளவரெனக் காணப் படும் உரிமம்பெற்றவர் ஒருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

சட்டமுறையற்ற பணச் சூதாட்டத்தை விளம்பரப் படுத்துதல்

**44.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகக் கொண்டுநடாத்தப்படுகின்ற ஏதேனும் பணச்சூதாட்டத்தை விளம்பரப்படுத்துகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொரு வரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, ஒரு இலட்சம்

ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட பணச்சூதாட்ட வளவுகளுக்கு வெளியே பணச்சூதாட்டத் தொழிற்பாடுகள் முதலியன

**45.** அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்படாத எவையேனும் வளவுகளில் அல்லது அவற்றிலிருந்து ஏதேனும் பணச்சூதாட்டத்தைக் கொண்டுநடாத்துகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

சட்டமுறையற்ற பணச் சூதாட்டத்துக்காக ஒரு சொந்தக் காரரினால் அல்லது குடியிருப் பாளரினால் வளவுகள் பயன் படுத்தப்படுதல் அல்லது அதன் பயன்பாட்டை அவர் அனுமதித்தல்.

**46.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகக் கொண்டுநடாத்தப்படுகின்ற ஏதேனும் பணச் சூதாட்டத்துக்காக வளவுகளைப் பயன்படுத்துகின்ற அல்லது பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கின்ற வளவுகளின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொரு வரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

சட்டமுறையற்ற பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்துதல் என்ற தவறு

**47.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகக் கொண்டுநடாத்தப்படுகின்ற ஏதேனும் பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்துகின்ற, முகாமைசெய்கின்ற, அல்லது ஒழுங்குபடுத்துவதில் அல்லது முகாமைசெய்வதில் உதவுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

சட்டமுறையற்ற பணச் சூதாட்டத்துக்கு நிதியளித்தல் என்ற தவறு

**48.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகக் கொண்டு நடாத்தப்படுகின்ற ஏதேனும் பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்துவதிலான அல்லது நடாத்துவதிலான நடைமுறையில் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கைக்காக நிதியளித்தலை வழங்குகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

சட்டமுறையற்ற பணச்சூதாட்ட வளவுகளில் இருத்தல் என்ற தவறு

**49.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகக் கொண்டுநடாத்தப்படுகின்ற ஏதேனும் பணச்சூதாட்ட வளவுகளினுள் அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்குக் காரணமுடையவராகவிருந்து பிரவேசிக்கின்ற, இருக்கின்ற மற்றும் காணப்படுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தடைசெய்யப்பட்ட அல்லது அங்கீகரிக்கப் படாத பணச் சூதாட்டப் பொறியைப் பயன் படுத்துதல்

**50.** வேறோராளினாலானபணச்சூதாட்டச்செயற்பாடுகளின் நோக்கங்களுக்காக, ஏதேனும் தடைசெய்யப்பட்ட பணச் சூதாட்டப் பொறியை உட்படுத்துகின்ற பணச்சூதாட்டத்தைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது ஏதேனும் தடைசெய்யப்பட்ட பணச்சூதாட்டப் பொறியை இலங்கையில் அல்லது இலங்கையிலிருந்து பயன்படுத்துகின்ற அல்லது தொழிற்படுத்துகின்ற, அல்லது அதன் பயன்பாட்டை அல்லது தொழிற்பாட்டை அனுமதிக்கின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொரு வரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

வயது குறைந்த தனியாட்களுடனான பணச் சூதாட்டம்

**51.** பதினெட்டு வயதுக்குக் குறைந்த வயதினரான ஆளொருவருடன் சமூகப் பணச்சூதாட்டம் தவிர்ந்த பணச்சூதாட்டத்தில் ஈடுபடுகின்ற அல்லது பதினெட்டு வயதுக்குக் குறைந்த வயதினரான ஆளொருவரின் சார்பில் வேறோர் ஆளுடன் சமூகப் பணச்சூதாட்டம் தவிர்ந்த பணச்சூதாட்டத்தில் ஈடுபடுகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொரு வரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தடை செய்யப்பட்ட வயது

**52.** பதினெட்டு வயதுக்குக் குறைந்த வயதினரான எவரேனுமாளை இலங்கையில் அல்லது இலங்கையிலிருந்து பணச்சூதாட்டத்தில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கின்ற உரிமம்பெற்றவர் ஒருவர் தவறொன்றைப் புரிகின்றா ரென்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன்மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

இருபத்தொரு வயதுக்குக் குறைவான ஆளைப் பணச்சூதாட்டத்தில் சட்டமுறையற்ற வகையில் தொழிலுக்க மர்த்துதல்

**53.** ஆளொருவரினால் செய்யப்பட்ட ஒழுங்கேற் பாடுகளுக்கிணங்க இலங்கையில் அல்லது இலங்கையி லிருந்து ஒரு பணச்சூதாட்டத் தொழிற்பாட்டைக் கொண்டு நடாத்துவதற்கு இருபத்தொரு வயதுக்குக் குறைந்த ஆளொருவரைத் தொழிலுக்கமர்த்துகின்ற அவ்வாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொரு வரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

பிழைவழியுய்க்கும் விளம்பரத்தைத் தடைசெய்தல்

**54.** (அ) பணச்சூதாட்டத்தின் தன்மை, ஆபத்துக்கள் அல்லது அதனோடு இணைந்துள்ள வெற்றியீட்டும் வாய்ப்புக்கள் தொடர்பாகப் பொய்யான, ஏமாற்றுகின்ற அல்லது பிழைவழியுய்க்கின்ற தகவல்களைக் கொண்டுள்ள; அல்லது

(ஆ) பணச்சூதாட்டத்தில் பங்குபற்றுதலானது நிதிசார் சிரமங்களைத் தீர்த்துவைக்கமுடியுமானது அல்லது சமூக அந்தஸ்தைச் சீராக்கமுடியுமானது என உட் கிடையாகக்கூறுகின்ற,

பணச்சூதாட்டச் செயற்பாடுகளுக்கான ஏதேனும் விளம்பரத்தை வெளியிடுகின்ற, ஒலிபரப்புகின்ற அல்லது வேறுவகையாகப் பரப்புகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

பொதுவான தவறு

**55.** இப்பாகத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏற்பாடுகள் தவிர்ந்த இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டின்கீழ் விதிக்கப்பட்ட எவையேனும் தேவைப்பாடுகளை, அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புகள் அல்லது வழிகாட்டுநெறிகளை மீறிச் செயலாற்றுகின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவரினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

மேலதிகத் தண்டம்

**56.** இச்சட்டத்தின்கீழான தவறொன்றை எவரேனுமாள் புரிகின்றவிடத்து, நிறைவேற்றப்பட்ட பணச்சூதாட்டச் செயற்பாடு, அச்செயற்பாட்டின் காலஎல்லை, தன்மை மற்றும் பாரதூரமானதன்மை மற்றும் அத்தகைய செயற்பாட்டினால் பொதுமக்களுக்கு விளைவிக்கப்பட்ட தீங்கு என்பனவற்றைக் கவனத்துட்கொள்வதன்மேல், அத்தகைய தவறாளர், இச்சட்டத்தின் வேறேதேனும் பிரிவின்கீழ் அவர் ஆளாகக்கூடிய ஏதேனும் குற்றப்பணத்துடன் அல்லது மறியற்றண்டனைக்காலத்துடன் சேர்த்து மேலதிகமாக ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினால் தண்டிக்கப்படலாம்.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல்

**57.** (1) இச்சட்டத்தில் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டதனைத் தவிர, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், இச்சட்டத்தின்கீழான புலனாய்வுகள், வழக்குநடவடிக்கைகளைத் தொடுத்தல், தவறுகளை விளங்குதல் என்பவற்றுக்கும் இச்சட்டத்தின் கீழான அத்தகைய ஏதேனும் விளக்கத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்புக்கள், தண்டனைத்தீர்ப்புக்கள் மற்றும் கட்டளைகளுக் கெதிரான மேன்முறையீடுகள் என்பவற்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட புலனாய்வுகளின்போது சேகரிக்கப்பட்ட விடயங்களைக் கவனத்துட்கொள்வதன்மீது, அதிகாரசபையானது எவரேனுமாள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளாரெனத் திருப்திப்படுமிடத்து, அதிகாரசபை 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் நியதிகளின்படி குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

நியாயாதிக்கம்

**58.** (1) இச்சட்டத்தின்கீழான எல்லாத் தவறுகளையும் கேட்பதற்கும், விளங்குவதற்கும், தீர்மானிப்பதற்குமான நியாயாதிக்கம் நீதிவான் நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், தவறொன்று புரியப்பட்டமை சம்பந்தமாகத் தீங்குபெருக்கும் சூழ்நிலைகள் அல்லது பொதுமக்களின் அமைதிக்குலைவுக்கு இட்டுச்செல்லும் சூழ்நிலைகள் இருக்குமிடத்து, குற்றப்பகர்வை நேரடியாக மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தல் சட்டத்துறைத் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

## பாகம் VII

## பொது ஏற்பாடுகள்

பதிவேடு வைத்திருப்பதற்கான தேவைப்பாடு

**59.** ஒரு பணச்சூதாட்ட நாளில் உள்வரும் பணத்தையும் வெளிச்செல்லும் பணத்தையும் உட்படுத்துகின்ற நாணயத்திலான ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும், எவையேனும் சந்தேகத்துக்கிடமான கொடுக்கல்வாங்கல்கள், பாரிய பணக் கொடுக்கல்வாங்கல், இலத்திரனியல் நிதிகளின்

கைமாற்றுகை மற்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறெவையேனும் விபரங்கள் என்பனவுட்பட, உரிமம் பெற்றவர் ஒருவர் வாடிக்கையாளர்களின் எல்லா விபரங்களும் பற்றிய பதிவேடொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

புத்தகங்களையும் பதிவேடுகளையும் பரிசோதனை செய்வதற்கும் பணச்சூதாட்ட வளவுகளைத் தேடுவதற்குமான தத்துவம்

**60.** (1) சபையானது அல்லது அதற்கெனப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரசபையின் எவரேனும் அலுவலர், சட்டத்துடன் அல்லது சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புகள் அல்லது வழிகாட்டுநெறிகள் என்பவற்றுடன் இணங்கி யொழுகப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக ஓர் உரிமம்பெற்றவரின் புத்தகங்கள், இடாப்புக்கள், பதிவேடுகள் அல்லது ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாமென்பதுடன் அவரின் தொழில் மற்றும் அலுவல்கள்பற்றியும் விசாரணைசெய்யலாம் அல்லது ஒரு சமாதான அலுவலருடன்சேர்ந்து ஒரு பணச்சூதாட்ட இடத்தை அல்லது வளவுகளைத் தேடலாம்; அத்துடன் அந்நோக்கத்துக்காக-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங் கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு இயைபான புத்தகங்கள், இடாப்புக்கள், பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் உள்ளனவென, நியாயமான ஏதுக்களின்மீது சபை அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் நம்புகின்ற எவையேனும் வளவுகளினுள் ஏதேனும் நியாயமான நேரத்தில் பிரவேசிக்கலாம்;

(ஆ) ஏதேனும் கணனி முறைமையில் அடங்கியுள்ள அல்லது தரவுச் செய்முறைப்படுத்தல் முறைமைக்குக் கிடைக்கக்கூடியனவாகவுள்ள எவையேனும் தரவுகளைப் பரிசோதனைசெய் வதற்கு, வளவுகளில் காணப்படும் ஏதேனும் கணனி முறைமையை அல்லது தரவுச் செய்முறைப்படுத்தல் முறைமையைப் பயன் படுத்தலாம் அல்லது பயன்படுத்தச்செய்யலாம்;

(இ) ஓர் அச்சுப்பிரதி அல்லது வேறு புரியக்கூடிய வெளியீட்டு வடிவத்தில், தரவுகளிலிருந்து ஏதேனும் பதிவேட்டை மீளத் தோற்றுவிக்கலாம், அல்லது அதனை மீளத்தோற்றுவிக்கச்செய்யலாம் என்பதுடன் அச்சுப்பிரதியை அல்லது

வெளியீட்டைப் பரிசோதனைக்காக அல்லது பிரதியெடுப்பதற்காக அகற்றலாம்;

(ஈ) ஏதேனும் புத்தகத்தின், இடாப்பின், பதிவேட்டின் அல்லது ஆவணத்தின் பிரதிகளைத் தயாரிப்பதற்கு வளவுகளிலுள்ள ஏதேனும் பிரதியெடுக்கும் சாதனத்தைப் பயன்படுத்தலாம் அல்லது பயன்படுத்தச்செய்யலாம்; அல்லது

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான நடவடிக் கைக்காகப் பயனுள்ளதாகவிருப்பதும், அல்லது நடவடிக்கையெடுப்பதற்கு இயைபானதாக விருப்பதும் ஏதேனும் தேடுதலின்போது கண்டுபிடிக்கப்படுவதுமான வேறேதேனும் பொருள்பற்றிய குறிப்பொன்றைச் செய்யலாம் அல்லது பொருட்பதிவேடொன்றைத் தயாரிக் கலாமென்பதுடன் தேடுதல்கள் தொடர்பாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள், இயன்றனவாகவிருக் கக்கூடியவரை, இப்பிரிவின்கீழான தேடுதல் களுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) இவ்வுட்பிரிவில், "சமாதான அலுவலர்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அத்தகைய தத்துவங்கள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பிரயோகிக்கப் படுவதனை அவசியமாக்கும் சூழ்நிலைகளைப் பணிப்பாளர் தலைமையதிபதி பதிதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதி பதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் பணச்சூதாட்ட வளவுகளிலிருந்து ஏதேனும் புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறேதேனும் ஆவணத்தைத் தனதுடைமையினுள் எடுக்குமிடத்து, அத்தகைய ஏதேனும் பொருளை உடைமையினுள் எடுக்கின்ற அலுவலர், பணச்சூதாட்ட வளவுகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்குத் தனதுடைமையினுள் அவர் எடுத்துள்ள புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் குறித்துரைக்கின்ற குறிப்பறிக்கையொன்றை வழங்குதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் உடைமையினுள் எடுக்கப்பட்ட ஏதேனும் கணக்குப்புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம், அத்தகைய புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தை நுனித்தாராய்வதற்காக அல்லது அத்தகைய புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணம் எவ்வாளுக்குச் சொந்தமானதோ அவ்வாளுக்கெதிராகச் சட்ட வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதற்காக அவசியமாகக்கூடியவாறான காலத்துக்கு அவரது உடைமையில் வைத்திருக்கப்படலாம்.

(6) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வளவுகளுக்குப் பொறுப்பாகவுள்ள சொந்தக்காரர் அல்லது ஆள் மற்றும் அதன்மீது காணப்படும் ஆளொவ்வொருவரும், சபைக்கு அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு அவர்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவதனை இயலச்செய்வதற்கு நியாயமான எல்லா உதவிகளையும் அளித்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் நிருவாகம் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புகள் அல்லது வழிகாட்டுநெறிகள் தொடர்பில் அவர்களுக்கு நியாயமாகத் தேவைப்படக்கூடியவாறான எவையேனும் தகவல்களை அவர்களுக்குக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

தகவலைப் பகிர்தல்

**61.** (1) தகவலானது சந்தேகத்துக்கிடமானது அல்லது இச்சட்டம், 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம், 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாயச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் அல்லது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் அல்லது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் அல்லது அச்சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், விதிகள், கட்டளைகள் அல்லது பணிப்புகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமைக்கான ஒரு புலனாய்வுக்கு இயைபானது அல்லது சட்டமுறையற்ற செயற்பாடொன்றை அமைத்துருவாக்குகின்ற தவறொன்றாக அமைகின்றது எனச் சந்தேகிப்பதற்குச் சபையானது நியாயமான ஏதுக்களைக் கொண்டிருப்பின், சபையானது, 60 ஆம் பிரிவின்கீழ்

நிறைவேற்றப்பட்ட பரிசோதனைகளிலிருந்தான அல்லது அவற்றிலிருந்து பெறப்பட்டனவான தகவல்களைத் தோதான ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகளுக்கு, சட்ட வலுவுறுத்துகை அதிகாரசபைகளுக்கு அல்லது மேற்பார்வைசார் அதிகார சபைகளுக்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் தகவலைப் பகிரும் நோக்கத்துக்காக, சபையானது, தோதான ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகள், சட்ட வலுவுறுத்துகை அதிகாரசபைகள் அல்லது மேற்பார்வைசார் அதிகாரசபைகளுடன் ஏதேனும் உடன்படிக்கையைச் செய்துகொள்ளலாம்.

(3) சபையானது புள்ளிவிபரங்களைத் தொகுத்தல் வேண்டுமென்பதுடன் நிதியமைச்சு, உண்ணாட்டரசிறைத் திணைக்களம் மற்றும் 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறு என்பவற்றுடன் தகவல்களைப் பகிரலாம்.

(4) இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக வழங்கப் பட்ட அல்லது பகிரப்பட்ட ஏதேனும் தகவலுக்கு 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**62.** (1) சபையானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன், அதிகாரசபைக்கும் இவ்வுட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட இயைபான நிறுவனங்களுக்கும் இடையே தகவல்களைப் பரிமாற்றுதல் தொடர்பாகப் பின்வருவனவற்றுடன் எழுத்தில் உடன்படிக்கையொன்றை அல்லது ஒழுங்கேற்பாடொன்றைச் செய்துகொள்ளலாம்:- தகவல்களைப் பரிமாற்றும் நோக்கங்களுக் காகச் சபையி னாலான உடன் படிக்கை களும் ஒழுங்கேற்பாடு களும்

(அ) அதிகாரசபையின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளையொத்த தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் கொண்டுள்ள ஒரு வெளிநாட்டரசின் நிறுவனம் அல்லது முகவராண்மை ஒன்று அல்லது ஒரு வெளிநாட்டரசின் அரசாங்கங்களினால் தாபிக்கப் பட்ட சர்வதேச ஒழுங்கமைப்பு ஒன்று; அத்துடன்

(ஆ) சட்ட வலுவுறுத்துகை முகவராண்மை ஒன்று அல்லது வெளிநாட்டு மேற்பார்வைசார் அதிகாரசபை ஒன்று.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் பரிமாற்றப்பட்ட தகவல்கள், அத்தகவல்கள் இச்சட்டத்தின்கீழ் சட்டமுறையற்ற செயற்பாடொன்றை அமைத்துருவாக்குகின்ற தவறொன்றை அல்லது பொருளளவில் அத்தகையவொரு தவறை ஒத்ததாகவுள்ள தவறொன்றாக அமைகின்ற தவறொன்றைப் புலனாய்வுசெய்வதற்கு அல்லது அதற்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்பதற்கு இயைபானதாகவிருக்குமெனச் சந்தேகிப்பதற்குச் சபையானது நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ள தகவல்களாகவிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கை அல்லது ஒழுங்கேற்பாடு பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) சட்டமுறையற்ற செயற்பாடொன்றை அமைத்துருவாக்குகின்ற ஏதேனும் செயலை அல்லது பொருளளவில் அத்தகைய தவறை ஒத்ததாகவுள்ள தவறொன்றாக அமைகின்ற தவறொன்றைப் புலனாய்வுசெய்வதற்கு அல்லது அதற்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்பதற்கு இயைபானவையாகவுள்ள நோக்கங்களுக்காகத் தகவல்களைப் பயன்படுத்துவதன்மீதான மட்டுப்பாடுகள்; அத்துடன்

(ஆ) தகவல்கள் அந்தரங்கமானவொரு முறையில் கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் சபையின் வெளிப்படையான சம்மதமின்றி மேற்கொண்டு வெளிவிடப்படுதலாகாது என்ற விதிப்பு.

தண்டமொன்றை விதித்தல்

**63.** (1) எவரேனுமாள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி, விதி, கட்டளை அல்லது பணிப்பை மீறிச் செயலாற்றியுள்ளாரென நம்புவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குப் போதிய சான்றுள்ளவிடத்து, அவர்-

(அ) இச்சட்டத்தின் 66 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழாத்தின் விதப்புரையின்மீதும்; அத்துடன்

(ஆ) முதற்றடவையாகத் தவறுபுரிபவரின் விடயத்தில், தவறானது எச்சூழ்நிலைகளில் புரியப்பட்டதோ அச்சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டும்,

ஒரு தண்டத்தை விதித்தல் தோதாகவிருக்குமாயின், ஒழுங்குவிதிமூலம் விதித்துரைக்கப்பட்டவொரு படிவத்திலான ஓர் அறிவித்தல் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒருமாத காலப்பகுதியினுள் தோன்றி அவரின்மீது தண்டமொன்று ஏன் விதிக்கப்படலாகாதெனக் காரணங்காட்டும்படி அவரைத் தேவைப்படுத்துகின்ற அந்த அறிவித்தலைச் சேர்ப்பிக்கச் செய்யலாம்.

(2) அறிவித்தல் எவ்வாளுக்குச் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அவ்வாள், அத்தகைய அறிவித்தல் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒருமாதகாலப்பகுதியினுள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி, விதி, கட்டளை அல்லது பணிப்பை மீறிச் செயலாற்றினாரென ஏற்றுக்கொள்ளுமிடத்து, நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படின் இச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படக்கூடிய எந்த அதிகபட்சக் குற்றப்பணத்துக்கு அத்தகைய ஆள் ஆளாகவிருக்கக்கூடுமோ அந்த அதிகபட்சக் குற்றப்பணத்தின் மூன்றிலொன்றை விஞ்சாத பணவகையான தண்டமொன்றைப் பணிப்பாளர் தலைமையதிபதி அவ்வாளுக்கு விதித்தல் வேண்டும்.

(3) (அ) எவ்வாளுக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அவ்வாள், அத்தகைய அறிவித்தல் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒருமாதகாலப்பகுதியினுள் தோன்றி தண்டம் விதிக்கப்பட்டதற்கெதிராகக் காட்டுவதற்கு அவருக்குக் காரணமொன்றுண்டெனக் கூறுமிடத்து, அக்கருமத்தைக் கேட்டு முடிபுசெய்வதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதி உடனடியாக மேற்கொண்டு நடவடிக்கையெடுக்கலாம்.

(ஆ) கொடுக்கப்பட்ட காரணங்களுடன் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படாதவிடத்து, அதற்கான காரணங்களைக் குறித்தளித்தபின்னர், இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தண்டத்தை அவர் விதிக்கலாம்.

(4) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி, விதி, கட்டளை அல்லது பணிப்பின் மீறுகைக்காக இப்பிரிவின்கீழ் எவரேனுமாளுக்கு ஒரு பணவகையான தண்டத்தைப் பணிப்பாளர் தலைமையதிபதி விதிக்குமிடத்து, ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்டவொரு படிவத்தில் அத்தகைய ஆளுக்கு முடிபு சேர்ப்பிக்கப்படுவதனை அவர் செய்வித்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது நடைமுறைப்படுத்துகை எவ்வமைச்சருக்குக் குறித்தளிக் கப்படுகின்றதோ அவ்வமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு, (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அத்தகைய முடிபு பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களைக்கொண்டவொரு காலப்பகுதியினுள் மேன் முறையீடு செய்யலாம்.

(6) பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபையும் தவறானது எச்சூழ்நிலைகளில் புரியப்பட்டதோ அச்சூழ்நிலை களையும் கவனத்துட்கொண்டு, செயலாளர், அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின்மீது முடிபொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன், ஒன்றில்-

(அ) பணிப்பாளர் தலைமையதிபதியின் முடிபை அனுமதிக்கலாம், மாற்றலாம் அல்லது வேறுபடுத்தலாம் மற்றும் அதற்கிணங்கச் செயலாற்றும்படி பணிப்பாளர் தலைமை யதிபதியைப் பணிக்கலாம்; அல்லது

(ஆ) அதன்கண் கூறப்பட்ட காரணங்களுக்காக மேன்முறையீட்டுக்கு அனுமதிமறுக்கலாம்.

(7) பணிப்பாளர் தலைமையதிபதி, செயலாளரினால் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு, அத்தகைய பணிப்பு வழங்கப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களைக்கொண்டவொரு காலப்பகுதியினுள் இணங் கியொழுகுதல் வேண்டுமென்பதுடன் செயலாளரின் முடிபினால் இன்னலுற்ற ஆளுக்கு அவரது பணிப்பை அறிவித்தலும் வேண்டும்.

(8) இப்பிரிவின்கீழான ஒவ்வோர் அறிவித்தலும் பதிவஞ்சலின்கீழ் அனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன் பதிவஞ்சலின்கீழ் அனுப்பப்படின் அல்லது கடைசியாக அறியப்பட்ட வாழிடத்தில் வெளிக் காட்டிவைக்கப்பட்டிருப்பின், அது அவ்வாளுக்குச் சேர்ப்பிக் கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(9) இச்சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், சார்த்தப்பட்ட தவறாளர் அத்தகைய தவறைப் புரிந்ததாக ஏற்றுக்கொண்டு அத்தகைய தண்டத்தைச் செலுத்தியுள்ளவிடத்து, அதேதவறு தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தில் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(10) செயலாளரின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய முடிபு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள், ஒரு சட்டவினாமீது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

தண்டத்தை அறவிடுதல்

**64.** (1) அறுபத்திமூன்றாம் பிரிவின் (4) ஆம், (6) ஆம் அல்லது (10) ஆம் உட்பிரிவுகளின்கீழ் செய்யப்பட்ட முடிபிலிருந்து ஒரு மாதம் கழிந்ததன்மேல், அத்தகைய முடிபு எவ்வாள் தொடர்பில் செய்யப்படுகின்றதோ அவ்வாள் தண்டக்கொடுப்பனவில் தவணைதவறுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதியானவர், மீறுகையானது எப்பிரிவில் இடம்பெற்றதோ அப்பிரிவில் நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவானுக்கு, அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தல் மற்றும் முடிபுபற்றிய சான்றுப்படுத்தப்பட்ட பிரதியுடன்சேர்த்து, பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டவொரு படிவத்தில் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) நீதிவான் அதன்மேல், (1) ஆம் உட்பிரிவின்கீழ் தண்டக் கொடுப்பனவில் தவணைதவறுகின்ற அத்தகைய ஆளை, இச்சட்டத்தின்கீழ் வருமதியான பணத்தொகையை அறவிடுவதற்காக அவருக்கெதிராக மேற்கொண்ட வழக்குநடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படுதலாகாதெனக் காரணங்காட்டும்படி அவர்முன்னர் கட்டளைவிட்டழைத்தல் வேண்டுமென்பதுடன் போதிய காரணம் காட்டுவதற்குத் தவறப்படின், மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற் பாலதான தவறொன்றுக்காக அத்தகைய ஆளின்மீது நீதிவானின் தண்டனைத்தீர்ப்பொன்றினால் விதிக்கப்பட்டவொரு குற்றப்பணமாக அத்தகைய பணத்தொகை கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகையவொரு தவறுக்காக விதிக்கப்பட்டவொரு குற்றப்பணத்தின்

கொடுப்பனவிலான தவணைதவறுகை தொடர்பாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் (அதன் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஈ) மற்றும் (ஐ) என்னும் பந்திகள்தவிர) அதன்மேல் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானானவர், அத்தகைய தண்டனைத்தீர்ப்பை விதித்த நேரத்தில் அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளின்மூலம் அவர் விடுத்திருக்கக்கூடிய ஏதேனும் பணிப்பையும் விடுக்கலாம்.

இடைக்காலத் தடையுத்தரவுக் காக விண்ணப் பித்தல்

**65.** ஆளொருவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளைத் தொடர்ச்சியாக மீறுகின்றாரென நம்புவதற்கு அதிகார சபைக்குப் போதிய சான்று உள்ளவிடத்து, அதிகார சபையானது, அத்தகைய செயலைப் புரிவதிலிருந்து அத்தகைய ஆளைத் தடைசெய்வதற்கான இடைக்காலத் தடையுத்தரவைப் பெற்றுக்கொள்வதற்கு நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

நிபுணர்கள் குழாம்

**66.** (1) பணச்சூதாட்டம், சட்டம் அல்லது கணக்கியல் என்ற துறையில் அறிவும் அனுபவமும் உடைய ஆட்கள் மூவரைக் கொண்டுள்ள நிபுணர்கள் குழாமொன்று, சபையினதும் செயலாளரினதும் கலந்தாலோசனையுடன் பணிப்பாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) எச்சூழ்நிலைகளின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதி எவரேனுமாளுக்குப் பணவகையான தண்டமொன்றை விதிக்கவேண்டுமோ அச்சூழ்நிலைகள்பற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விதப்புரைகளைச் செய்தல் அத்தகைய நிபுணர்கள் குழாத்தின் பணியாதல் வேண்டும்.

(3) அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் நிபுணர்களுக்கு ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அவர்கள் அமைந் தோராதலும் வேண்டும்.

காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல்

**67.** (1) அதிகாரசபையின் குறிப்பிட்ட ஏதேனும் நோக்கத்துக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளப் படுவதற்குத் தேவைப்படுத்தப்படுமிடத்தும், அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அந்நோக்கத்துக்காக உத்தேசிக்கப்பட்ட கொள்ளுதலை அங்கீகரிக்குமிடத்தும், அவ்வாதனம் ஒரு பொது நோக்கத்துக்காகத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் அதற்கிணங்கக் கொள்ளவும்படலாம்.

(2) அதிகாரசபைக்காக (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் கொள்ளுதலுக்காகச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

வருடாந்த அறிக்கைகள்

**68.** (1) அதிகாரசபையானது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறுமாதங்களினுள் அதிகார சபையினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்கள் அத்தகைய அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்:

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் சேர்த்து ஆண்டுக்காக அதிகார சபையின் கணக்காய்வுசெய்யப்பட்ட கணக்குகள்; அத்துடன்

(ஆ) அத்தகைய அறிக்கையும் கணக்குகளும் எவ்வாண்டு தொடர்பானவையோ அவ்வாண்டை உடனடுத்துப் பின்வரும் ஆண்டுக்காக உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்பற்றிய அறிக்கையொன்று.

(2) அமைச்சர், வருடாந்த அறிக்கை பெறப்பட்ட தேகதியிலிருந்து மூன்றுமாதங்களினுள், அத்தகைய அறிக்கையை, (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன்சேர்த்து, பாராளுமன்றத்தில், அதனால் கவனத்துட்கொள்ளப்படுவதற்காக இடுதல் வேண்டும்.

இரகசியம் பற்றிய வெளிப் படுத்துகை

**69.** சபையுறுப்பினர்களும் அதிகாரசபையின் அலுவலர்களும் ஊழியர்களும், அவர்களின் கடமைகளை ஏற்குமுன்னர் அதிகாரசபையின் தொழிற்பாடு சம்பந்தமான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் கண்டிப்பான இரகசியத்தைப் பேணுவதற்கு வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகையொன்றைக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகைமூலம், பின்வருவனதவிர, அவரது பணிகளை நிறைவேற்றுகையில் அவரது அறிவுக்கெட்டக்கூடிய ஏதேனும் கருமத்தை வெளிவிடாதிருப்பதற்கு அவர் வாக்குறுதியளித்தலும் வேண்டும்:

(அ) ஒரு சட்ட நீதிமன்றத்தினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது; அல்லது

(ஆ) 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுடனும் இணங்கியொழுகுவதற்கென

இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைக் கான பாதுகாப்பு

**70**. அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினர், பணிப்பாளர் தலைமையதிபதி, அலுவலர் அல்லது சேவையாளர் அல்லது பணியாட்டொகுதியின் எவரேனும் உறுப்பினரினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது விடயத்துக்கேற்ப, அதிகாரசபையின் அல்லது சபையின் பணிப்புகளின்மீது அவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக, அவர் நல்லெண்ணத்துடன் செயலாற்றினாரென்றும் உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும், நியாயமான கவனத்தையும் தேர்ச்சியையும் பிரயோகித்தாரென்றும் எண்பித்தால், அவருக்கெதிராகக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

அமைச்சரின் பணிப்புகள்

**71.** (1) அமைச்சர், அதிகாரசபையின் தத்துவங்களைப் பிரயோகித்தல், கடமைகளைப் புரிதல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் என்பனபற்றிப் பொதுவான பணிப்புகளை எழுத்தில் அதிகாரசபைக்கு விடுக்கலாம். அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

(2) அமைச்சர், காலத்துக்குக்காலம், எழுத்தில், அதிகாரசபையின் ஆதனமும் செயற்பாடுகளும் தொடர்பிலான

விபரத்திரட்டுக்களையும், கணக்குகளையும், வேறு தகவல்களையும் அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அவருக்குக் கொடுத்துதவும்படி அதிகாரசபையைப் பணிக்கலாம். அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல் அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

அதிகாரசபையின் தத்துவங்களைக் கையளித்தல்

**72.** சபையானது, அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தின், கடமையின் அல்லது பணியின் பிரயோகத்தை, புரிகையை அல்லது நிறைவேற்றுகையைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலரின் சம்மதத்துடன் அத்தகைய அலுவலருக்கு எழுத்தில் கையளிக்கலாம். சபையானது, அத்தகைய ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

2023 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்துக்குட்பட அதிகாரசபை அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்

**73.** அதிகாரசபையானது, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

அதிகாரசபையின் உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர் கள் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்

**74.** அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

செலவுகளை மீளளித்தல்

**75.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் அதிகார சபையினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகார சபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவு அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன்

அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் அதிகார சபையின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) எவரேனுமாளினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்

**76.** (1) எந்த வேறு கருமம் விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டதோ அது தொடர்பில் அல்லது அதுதொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டதோ அந்த வேறேதேனும் கருமம்தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் எவையேனும் அல்லது எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்:-

(அ) பணச்சூதாட்டத்தில் ஈடுபடுவதற்கு ஒரு விண்ணப்பகாரரின் பொருத்தமாந்தன்மை;

(ஆ) விண்ணப்பத்தைச் செய்முறைப்படுத்துவதற்கு விதிக்கப்படவேண்டிய கட்டணங்கள்;

(இ) உரிமங்களின் வகைகள்;

(ஈ) குறைந்த ஆபத்தைக்கொண்ட பணச்சூதாட்டச் சேவைகளுக்கான வகுப்பு உரிமமும் வகுப்பு உரிமம்பெற்றவருக்கு ஏற்புடையற்பாலனவான நிபந்தனைகளும்;

(உ) பணச்சூதாட்ட இடமொன்றாக இருக்கவேண்டிய ஏதேனும் இடத்தின் அல்லது வளவுகளின் மற்றும் ஏதேனும் துணைநிலையான கட்டிடத்தின் பொருத்தமாந்தன்மைக்கும், பணச்சூதாட்டம் சம்பந்தமாக வழங்கப்பட்ட சேவைகளுக்குமான கட்டளைக்கற்கள்;

(ஊ) பணச்சூதாட்டத்தை விளம்பரப்படுத்துவதன் மீதான மட்டுப்பாடுகள்;

(எ) பணச்சூதாட்டப் பொறிகளின் பயன்பாட்டுக்கும் வேறு தொடர்புபட்ட கருமங்களுக்குமான கட்டளைக்கற்கள்;

(ஏ) பணச்சூதாட்டப் பொறிகளின் அங்கீகாரத்தினது செல்லுபடியாந்தன்மை, பணச்சூதாட்டப் பொறிகளின் நிபந்தனைகள், பணச்சூதாட்டப் பொறிகளைக் கைமாற்றுவதன்மீதான மட்டுப்பாடுகள் மற்றும் பணச்சூதாட்டப் பொறிகளுக்காகத் தேவைப்பட்ட திருத்த நடவடிக்கை.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொரணப்படுதல் வேண்டும்.

(5) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முறையாகச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஒழுங்குவிதியொன்று எத்தேதியன்று ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விதிகள்

**77.** (1) அதிகாரசபையானது எக்கருமங்களுக்காக இச்சட்டத்தின்கீழ் விதிகள் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது ஆக்கப்படவேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்:-

(2) குறிப்பாகவும் மற்றும் (1) ஆம் உட்பிரிவில் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அதிகாரசபை பின்வரும் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்:-

(அ) கூட்டங்களிலான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துதலும் கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும்; அத்துடன்

(ஆ) அதிகாரசபையினது இலச்சினையின் கட்டுக்காப்புக்காகவும் அதனைப் பொறிக்கின்ற முறைக்காகவும் ஏற்பாடுசெய்தல்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டின்மேல் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

நிலைபெயர்கால ஏற்பாடுகளும் பேணல்களும்

**78.** (1) (44 ஆம் அத்தியாயமான) குதிரைப்பந்தய ஓட்டத்தின்மீது பந்தயம்பிடித்தல் கட்டளைச்சட்டம், (46 ஆம் அத்தியாயமான) சூதாட்டக் கட்டளைச்சட்டம் மற்றும் 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத்தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் என்பன இத்தால் நீக்கப்படுகின்றன.

(2) மேற்கூறப்பட்ட சட்டங்கள் நீக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும்:-

(அ) (44 ஆம் அத்தியாயமான) குதிரைப்பந்தய ஓட்டத்தின்மீது பந்தயம்பிடித்தல் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளவையுமான எல்லாப் பதிவுச் சான்றிதழ்களும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவனவாக, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் தொடர்ந்திருத்தலும் வேண்டும்;

(ஆ) 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத்தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளவையுமான எல்லா ஒழுங்குவிதிகளும், அத்தகைய ஒழுங்கு விதிகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுவரை, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறு வனவாக, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளாகக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன் அத்தகைய ஒழுங்குவிதிகள் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினால் திருத்தப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது மாற்றப்படலாம்;

(இ) 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத்தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின்கீழ் சீட்டாட்டத்தொழில் ஒன்றைக் கொண்டுநடாத்துவதற்காக வழங்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளவையுமான எல்லா உரிமங்களும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவனவாக, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் தொடர்ந்திருத்தலும் வேண்டும்;

(ஈ) 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத்தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின்கீழும் (46 ஆம் அத்தியாயமான) சூதாட்டக் கட்டளைச்சட்டத்தின்கீழும் தொடுக்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லாத் துடர்ச்சிகளும், வழக்குகளும், வேறு சட்ட வழக்குநடவடிக்கைகளும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவனவாக, இச் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் தாபிக்கப் பட்ட அதிகாரசபையினால் அல்லது அதற் கெதிராகத்தொடுக்கப்பட்டதுடர்ச்சிகளாகவும், வழக்குகளாகவும், வேறு வழக்கு நடவடிக்கைகளாகவும் இருக்கின்றனவாகக்

கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்கத் தொடர்ந்துநடாத்தப்பட்டுப் பூர்த்திசெய்யவும்படலாம்.

பொருள்கோடல்

**79.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய-

"சீட்டாட்டம்" என்பது, சமமான வாய்ப்பைக் கொண்டிராதவொரு வாய்ப்பு விளையாட்டு என்று பொருளாகும்;

"சிறுவர்" என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைவான ஆள் என்று பொருளாகும்;

"எண்ணிமப் பணச்சூதாட்டம்" என்பது, இலத்திரனியல் அல்லது எண்ணிம வழிவகைகளைப் பயன்படுத்தி நடாத்தப்படுகின்ற, அல்லது நடாத்தப்படுவதற்கு இயன்றதாகவுள்ள ஏதேனும் வகையினதான பணச்சூதாட்டம் என்று பொருளாகும் என்பதுடன் ஊடாட்டச் சூதாட்டம், இணையத்தளப் பணச்சூதாட்டம், செல்லிடத் தொலைபேசிப் பணச்சூதாட்டம், சமூகப் பணச்சூதாட்டம், மற்றும் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் காலத்துக்குக்காலம் 19 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கக்கூடியவாறாக இலத்திரனியல் அல்லது எண்ணிம வழிவகைகளைப் பயன்படுத்தி நடாத்தப்படுகின்ற அல்லது நடாத்தப்படுவதற்கு இயன்றதாகவுள்ள வேறேதேனும் வகையினதான பணச்சூதாட்டம் என்பவற்றையும் உள்ளடக்கும்;

"பணச்சூதாட்டம்" என்பது, பந்தயம்பிடித்தல், சூதாட்டம், நிகழ்நிலைச் சூதாட்டம், சீட்டாட்டம், கடலுலாக் கப்பற் சீட்டாட்ட நிலையங்கள், மகிழ்வுலாத் தொழிற்பாடுகள் என்று பொருளாகும் என்பதுடன் எண்ணிமப் பணச்சூதாட்டம், பக்கரட், பண்ட்டோபங்கோ, பிக் சிக்ஸ், ப்லக் ஜக், போல், செமின்-டி-பெர், சக்-எ-லக், க்றவுண் அன்ட் அங்க்கர், பாரோ, பாரோ பாங்க், ஹசாட், போக்கர் டைஸ், பொன்டூன், அமெரிக்கன் பிரெஞ்ச் ரூலெட், ட்ரென்ட்-எட்-குவான்ட், விங்கட்-எட்-உம், அல்லது வீல் ஒவ் போர்ச்சியூன் விளையாட்டை அல்லது தருமஞ்சார் அல்லது பரோபகாரஞ்சார் நோக்கங்களுக்கான பணச்சூதாட்டம் அல்லது வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் காலத்துக்குக்காலம் அமைச்சர் 19 ஆம்

பிரிவின்கீழ் குறித்துரைக்கக்கூடிய வேறேதேனும் விளையாட்டையும் உள்ளடக்கும்;

"பணச்சூதாட்ட வளவுகள்" என்பது, இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளுட்பட ஏதேனும் பணச் சூதாட்டத்தை விளையாடுவதற்காக, உரிமை என்ற வகையாகவாயினுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி, கொடுப்பனவுடனோ அல்லது கொடுப்பனவின்றியோ, எந்த வளவுகளுக்குத் தனியாட்கள் அணுக்கத்தைக் கொண்டுள்ளனரோ அந்த வளவுகள் என்று பொருளாகும்;

"மகிழ்வுலா" என்பது,-

(அ) ஒழுங்கேற்பாடுகள், ஆகக்குறைந்தது பகுதியளவிலேனும், ஒரு மகிழ்வுலா ஒழுங்கமைப்பாளரினால் செய்யப்படு கின்றவிடத்தும்; அத்துடன்

(ஆ) இலங்கையினுட் பிரவேசிக்கின்ற ஆளுக்கான போக்குவரத்து, உணவு மற்றும் இடவசதிக்கான ஆகுசெலவுகள் எல்லாம், அல்லது அவற்றின் கணிசமான அளவிலான பாகம், ஒரு சீட்டாட்ட உரிமத்தை வைத்திருப்பவரினால் அல்லது அவர்சார்பில் செலுத்தப்படுமிடத்தும்,

ஒரு சீட்டாட்ட நிலையத்தில் பணச்சூதாட்டம் விளை யாடுவதற்கான பிரதான நோக்கத்துடன் ஒரு வரை யறுக்கப்பட்ட காலப்பகுதிக்காக இலங்கையினுட் பிரவேசித்தல் என்று பொருளாகும்;

"மகிழ்வுலா உடன்படிக்கை" என்பது, பங்காண்மையின் நியதிநிபந்தனைகளை உருவரைந்து ஒரு பணச் சூதாட்டத் தொழிற்படுத்துநருக்கும் ஒரு மகிழ்வுலாத் தொழிற்படுத்துநருக்குமிடையேயானவோர் ஒப்பந்த முறையிலான உடன்படிக்கை என்று பொருளாகும்;

"மகிழ்வுலாத் தொழிற்படுத்துநர்" என்பது, பணச் சூதாட்டக்காரர்களின் போக்குவரத்து, இடவசதி மற்றும் களியாட்டத்துக்காக ஒழுங்கேற்பாடுசெய்கின்ற அல்லது அவற்றை வசதிப்படுத்துகின்ற ஆளொருவர் அல்லது உருவகமொன்று என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டவரும் அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின்கீழ் அல்லது 44 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்டவருமான அமைச்சர் என்று பொருளாகும்;

"சமூகப் பணச்சூதாட்டம்" என்பது,-

(அ) இலங்கையில் ஒன்றில் தனியாளொருவரின் மனையாகவுள்ள அல்லது வேறொரு தனியாளின் மனையாகவுள்ள வளவுகளில் அத்தனியாளினால் நடாத்தப்பட்ட;

(ஆ) அதே குடும்பவுறுப்பினர்களாகவுள்ள அல்லது ஒருவரையொருவர் தனிப்பட்டமுறையில் அறிந்துள்ள தனியாட்களை மட்டுமே அதன் பங்குபற்றுநர்களாகக் கொண்டுள்ள;

(இ) சம்பந்தப்பட்ட தனியாட்களுக்கிடையே அது கிரமமாக, வழக்கமாக அல்லது ஒழுங்கேற்பாட்டின்மூலம் இடம்பெறக்கூடிய போதிலும், பொருளளவில் தன்னியல்பாகவுள்ள;

(ஈ) பின்வருவனவற்றினால் மேம்படுத்தப்படாதுள்ள அல்லது நடாத்தப்படாதுள்ள:-

(i) பணச்சூதாட்டத்தில் பங்குபற்றாத எவரேனுமாளினால் அல்லது அவரது தனிப்பட்ட ஈட்டுகைக்காக; அல்லது

(ii) ஏதேனும் தொழிலின்போது; அத்துடன்

(உ) பணச்சூதாட்டத்தில் பங்குபற்றுகின்றவர் ஒருவர், பணச்சூதாட்டத்தின் விளைவாக இலாபமொன்றைப் பெறமுடியுமான அல்லது வேறேதேனும் நன்மையை ஈட்டமுடியுமான ஒரேவழியானது வெற்றியீட்டுதலின் மூலமாகவிருக்கும்வகையில் நடாத்தப்படுகின்ற,

தொலைவுப் பணச்சூதாட்டம் சாராதது என்று பொருளாகும்; அத்துடன் தனியார் அல்லது வர்த்தகஞ்சாராப் பணச்சூதாட்டத்தையும் உள்ளடக்கும்;

"சட்டமுறையற்ற செயற்பாடு" என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்றை அமைத்துருவாக்குகின்ற ஏதேனும் செயல் என்று பொருளாகும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**80.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம் இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக் கொள்ள முடியும்